1407

Regd. No. M. 878.

10 OCT ... 8 A.M ... PAR.
5 - MAR 1924
MADRAS

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion Science, Art and Civilization.

தொகுதி 8 } 1917-௵ செப்டம்பர்௴ / பிங்கள௵ புரட்டாசி௴ { பகுதி 5

அ. ரங்கசாமி ஐயர், B.A., B.L., F.T.S., பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2.   தனிப்பிரதி அணா 4.

மதுரை

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

MADRAS 5 OCT. 1 PAR.

விஷய அட்டவணை

(CONTENTS.)

பக்கம்

1. பத்திராதிபர் பக்கம்—Editor's page 161
2. தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ. 162
   Current Events—R. Rangaswami Iyer, B. A.
3. பிரஹ்மக்ஞான தரிசனம் —வி. வெங்குசாமி ஐயர் 169
   Elements of Theosophy—V. Venkusami Iyer
4. தமிழபிமானிகட்கோர் விண்ணப்பம்—அ. நம்மாழ்வார் 172
   A word to Lovers of Tamil—A. Nammalwar
5. நக்ஷத்திரப் பிரகாசம்—ஜகத்குருதாஸன் 175
   Starlight—Jagadgurudasan
6. நாம் யார் என்று விசாரிப்பது அவசியம்—எம. வேதநாயகசாமி 181
   Who are we—M. Vedanayakasami
7. சில கீழ்ஜாதியாரின் கஷ்டங்கள்—R. பஞ்சாபகேசையர் 184
   Caste disabilities of the depressed classes
8. சுதேசக் கல்வி—R. ரெங்காச்சாரி எம். ஏ. 189
   National Education—A Rangacharri M. A.
9. ஒரு கதை—சோமசன்மா 193
   A Story—Somasarma
10. புத்தகவரவு—Review of Books 198
11. சமாசாரம்-News 199

விலை] 'மரணபயம் வேண்டாம்.' [அணா 2

ஒவ்வொருவரும் படிக்கவேண்டும். !!

காலம் சென்ற பிரஹ்மஸ்ரீ ப. நாராயண ஐயர் பி. ஏ. பி. எல்., எப். டி. எஸ்., ஹைகோர்ட்டு வக்கீல், மதுரை பிரஹ்மக்ஞான சபை பிரசிடெண்டு அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. ஸ்ரீமான் லெட் பீடர் அவர்களுடைய அருமையான "To those who mourn" என்ற புத்தகத்தின் மொழி பெயர்ப்பு.

வெகு இலகுவாய் யாவரும் அறியும்படி தமிழில், எழுதப்பட்டிருக்கிறது. யாவரும் அவசியம் வாங்கிப் படிக்கவேண்டியது. இத் தொகுதியில் முன் சஞ்சிகையில் 158-ஆம் பக்கம் பார்க்க.

விலை சொற்பம் அணா 2 மட்டும்.

தபால் சார்ஜ் வேறு. ஸ்டாம்பு முன் அனுப்பிப் பெறுக.

பிரஹ்மக்ஞான மந்திரம், மதுரை.

லேட் ஸ்ரீ. பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்

அவர்களுடைய அருமையான புத்தகங்கள்.

தபாற் கூலி வேறு.

மகாலய பக்ஷமும் நவராத்திரியும் — அணா 1

காயத்ரீ ராமாயணம் — அணா 1

ரஹஸ்யார்த்தங்களை உணர்த்துவதில் மிகத் தேர்ச்சிபெற்ற இப்பெரியவரின் புத்தகங்கள் கிடைப்பது அரிது. ஆகையால் முந்துங்கள்.!!

ஸ்ரீ பி. எஸ். ராமசுப்பையர் புஸ்தகம்.

லோக குருவாகிய பரமன் வருவானென். — விலை அணா 1.

பிரஹ்மஞ்ஞான சபை, மதுரை.

விளம்பரம்

உதாஸீந ஸாது ஸ்தோத்திரம்:—(பி. ஆர். சுந்தரராஜ ஐயர்) இது ஓர் அருமையான ஸமஸ்கிருத நூல். தேவதீர்த்தர் என்ற ஓர் யதியால் இயற்றப்பெற்றது. இது பாம்பின் நடை யெனப் பொருள் தரும் புஜங்கப் பிரயாதமாகிய சந்தத்தில் இன்னிசையான பதங்களால் இசைக்கப்பட்டது. உலகின்கண்ணுள்ள எல்லாவற்றுள்ளும் ஈசுவர விளக்கம் அதிகமாயுள்ள மஹான்களைப்பற்றிய துதியாக இச்சுலோகங்கள் நிகழ்கின்றன. இதில் மஹான்களுடைய லக்ஷணங்களைப்பற்றி விவரங்களநேக முள்ளன. தமிழ் மொழிபெயர்ப்பு. குறிப்புரைகளோடு வெளியிடப்பட்டது. இதன் விலை 6 அணா

த்யானக்கிரம விஷயம்:—(கே. எஸ். ராமச்சந்திரய்யர்) தியானத்தின் பிரயோஜனமென்னவெனில், பிரதி மனுஷ்யனும் அவனவன் தினசரி நடபடிக்கைகளில் ஸத்யத்தையும், தர்மத்தையும் சுகத்தையுமே கடைப்பிடிக்கும் திறனைப்பெறுமாறு, சஞ்சலமுள்ள நம்மனதை ஓர் குறித்த வகையிற் பழக்குதலேயாம். அதற்கு இலகுவாக "ஸற்குரு சரணங்களில்" என்ற அரிய கிரந்தத்தின் விஷயங்கள் யாவும் மாதத்திற்கொரு சிந்தனையாகவும், வாரந்தோறும் அப்பியசிக்கத்தக்க ஓரோர் நற்சிந்தனையாகவும், பிரதிதினமும் நமது அனுஷ்டானத்தை நேர்மைப்படுத்தக்கூடிய ஓரோர் நற்சிந்தனையாகவும் வகுக்கப்பட்டு, தியானக்கிரமத்திற்கு அநுகூலமாய் பிரசுரமாகி யிருக்கின்றன. எல்லோரும் வாங்கிப்படித்து தியானித்து நற்பயன் பெறுமாற விலை சொற்பமாக 4-அணா வீதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பிரஹ்மஞான மந்திரம் மதுரை

விலை அணா 1]   [தபால் கூலி வேறு

இச்சமயம் அவசியம் வாசிக்க

வேண்டிய புத்தகம்.!!

மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார்

சரித்திரச் சுருக்கம் அணா 1.

இப்புத்தகம் பிரஹ்மஸ்ரீ ப. நாராயணையர் எழுதியது. மிகவும் எளியதமிழில் யாவரும் அறியும்படி வரையப்பட்டது. அழகான தாளில் கண்ணுக்கு ரமணீயமாக அச்சிடப்பட்டது.

1½ அணா ஸ்டாம்பு அனுப்பி 1 பிரதி பெறுக.

பிரஹ்மக்ஞான சபை, மதுரை.

அணா 1]   [தபால் கூலி வேறு

கிடைத்தற் கரிது!   அருமையான புத்தகம்!

எண்ணங்களின் ரகசியம்.

லேட் ப. நாராயண ஐயர் இயற்றியது.

படங்களுடன் கூடியது.

நல்ல எண்ணம் எண்ணுவதின் அவசியமும் கெட்ட எண்ணங்களைத் தவிர்த்தலின் முக்கியமும், இச்சிறு புத்தகத்தில் நன்கு விளக்கப் படுகின்றன.

லேட் ஸ்ரீ ப. நாராயண ஐயர் அவர்களின்
இதரப் புத்தகங்கள்.

ஸன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்	விலை	அணா 1.
பிரஹ்மக்ஞானமும் பிரஹ்மக்ஞான சபையும்		பை 6
பகவான் கௌதம புத்தரின் சரித்திரம்	,,	பை 6
லோக குருவின் அவதாரங்கள்	,,	பை 6
காயத்ரீ	,,	அணா 1
மோனம் என்பது ஞான வரம்பு	,,	பை 6
'ஹிந்து' என்பவன் எவன்?	,,	பை 6
ஹெலினம்பாள் அம்மையார் சரித்திரச் சுருக்கம்	,,	பை 6

தபால் கூலி வேறு.

பிரஹ்மக்ஞான சபை, மதுரை.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 8 | 1917-௵ செப்டம்பர்௴ பிங்கள௵ புரட்டாசி௴ | பகுதி 5

பத்திராதிபர் பக்கம்.

நமது பூர்ணசந்திரோதயப் பத்திரிகையில் 1911ஆம் வருஷத் துவக்கத்திலிருந்து குமாஸ்தாவாயும், உதவிப் பத்திராசிரியராயுமிருந்துவந்த ஸ்ரீ பி. எஸ். ராமசுப்பையர் இப்போது இப்பத்திரிகையை விட்டு நீங்கும் சமயம் நேர்ந்துவிட்டது என்று விசனிக்கிறோம். பிரஹ்ம ஸ்ரீ ப. நாராயண ஐயர் அவர்கள் காலம் முதல் இவர் பத்திரிகை வேலையை திருப்திகரமாய்ப் பார்த்து வந்ததுமன்றி மதுரை பிரஹ்மஞான சபை சமபந்தமாயும் அநேக வேலைகளையும் செய்து வந்திருக்கிறார் உதய நக்ஷத்திர சங்கம், நக்ஷத்திர சேவகர் சங்கம், ஸ்வர்ணமணிமாலை இன்னும் அநேகவித மான முயற்சிகளில் முக்கியமான வேலைகளைச் செய்து வந்திருக்கிறார். சென்ற 3 மாதகாலமாக நமது தலைவர் ஸ்ரீபெஸண்டம்மையவர்களை நிர்ப்பந்தித்தமுதற்கொண்டே நாடெங்கும் உண்டான கிளர்ச்சியால் இவரும் தூண்டப் பெற்று ராஜீய சீர்திருத்தத்திற்காக சுயாட்சி சபைகள் விஷயமாய் ஆங்காங்கு சென்று சபைகள் ஸ்தாபிக்கவும்,

உபந்யாசங்கள் செய்யவும் வேண்டுமென அவாக்கொண்டு இப்பத்திரிகைக்குத்தம் முழுமுயற்சியையும் செலுத்தமுடியாததால் இதைவிட்டு விலகுகிறார். அப்படி இதைவிட்டு விலகினாலும் இப்பத்திரிகையின் நன்மையைக்கோரி, அதற்கு விஷயதானங்களை அனுப்பியும், மற்றும் இதன் பிரசாரத்தை விருத்தி செய்தும் வருவார் என்றும் அவர் தற்போது எடுத்துக்கொண்ட முயற்சியிலும் அவர் விசேஷமான தேர்ச்சியை அடைந்து பெரும்பயனை யடைவார் என்றும் எண்ணுகிறோம்.

தற்கால நிலைமை.

13—9—17.

மூவர் பந்தமுமற முன்னவன் அருளுக !

நமது தலைவர் ஜூன் மீ 16ஆம் தேதியன்று மதராஸ் கவர்னர் அவர்கள் உத்தரவுப்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர் ஜூலை மாதம் 16-ஆம் தேதியிலும் ஆகஸ்டு மீ 16 ஆம்தேதியிலும் அத்தினத்தை ஒரு விரததினமாகக்கொண்டாடி ஒவ்வொரு கிராமத்திலும், பட்டணத்திலும் ஜனங்கள் கூட்டங்கள் கூடி நமது அன்னையவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று தமது தீவிர சங்கற்பத்தை வெளியிட்டு அத்தீர்மானங்களைப் பத்திரிகைகளிலும், இங்கிலாந்தில் இந்தியமந்திரியவர்களுக்கும், பிரதம மந்திரியவர்களுக்கும், இந்திய ராஜப்பிரதிநிதியவர்களுக்கும் வெளியிட்டனர். இராஜாங்கத்தாருக்கு ஜனங்களுடைய நோக்கத்தை வெளியிடும் வண்ணம் ஆங்காங்கு ஊர்வலங்களும் திறள்திறளாய்ப் புறப்பட்டுச் சென்றன. பல நகரங்களில் அங்ஙனம் ஊர்வலம் புறப்பட்டுக்கோவில்களுக்குச் சென்று தேவதார்ச்சனைகள் நடத்தி வந்தனர்கள். மழை பெய்துகொண்டிருந்த போதிலும், தங்கள் உடைகளுக்கும், சரீரத்துக்கும், நேரிடக்கூடிய சிதைவைக் கருதாது, தலையில் குடைபிடித்தவர்களும் பிடியாதவர்களுமாக ஒரு மைல் தூரம்வரை கூடத் திறள் திறளாக ஜனங்கள் கோவிலுக்குச் சென்றனர் என்

ருல், அவர்கள் கொண்ட சங்கற்பம் போலியல்ல, ஆனல் ஆழ்ந்த மனத்துடன், உண்மையாய்க் கொண்டது என்பதற்குச் சந்தேகமென்ன? இவ்வளவு ஏற்பட்டும் என்னபயனுச்சுது? நமது கோரிக்கை நிறைவேறிற்ரு? அல்லது வருகிற செப்டம்பர் ௴ 16உயும் அங்ஙனமே நம்முடைய விரதத்தை அனுசரிக்க வேண்டியதுதானே? அறியோம்.

*
* *

இம்முயற்சிகளுடன் நிற்காமல், சட்டப்படி சில முக்கியமான முயற்சிகளும் யெடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாகூஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களிடம் இங்கிலாந்தில் இராஜாங்க அமைப்புச் சட்டத்தில் ஒப்பற்ற நிபுணரான ஸர் ஜான் ஸைமனுல் நமது தலைவரவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று மனுப்போடப் பட்டிருக்கிறது. எந்தச் சட்டப்படி—அதாவது இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி—நமது அன்னையவர்களை நிர்ப்பந்தித்து மேற்கூறிய உத்தரவு பிறந்ததோ அந்தச் சட்டமே செல்லாதென்றும், அப்படிப்பட்ட சட்டமானது ராஜாங்க விசுவாசமுள்ள பிரஜைகளின் விஷயமாய் உபயோகப்படுத்தத்தக்கதில்லை என்றும் அந்த மனுவில் கண்டிருக்கிறது. மாகூஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்கள், மனுவில் கோரியபடி உத்தரவு செய்யும்படி கிருபை செய்வாராக.

*
* *

ஜூன் ௴ 16உக்கும் நாளிது தேதிக்கும் இடையில் பல முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. முன்னிருந்த இந்திய மந்திரி போய் இப்போது புதிய மந்திரி வந்திருக்கிருர். தத்வ சாஸ்திர பாண்டித்யத்திலும், சரித்திர தத்துவ சாஸ்திரத்திலும், ஆங்கிலத்திலும் முதன்மையரானவரும் அங்ஙனமே அரசாட்சி முறையிலும் விசேஷமாண திறமை வாய்ந்தவருமான லார்டு மார்லி சில வருஷங்களுக்குமுன் இந்திய மந்திரியாயிருந்தார். அப்போது இந்திய உபமந்திரியாயிருந்த இ. எஸ். மாண்டேகு என்பவர்

தான் இப்போது இந்திய மந்திரி, இவருடைய அபிப்பிராயங்கள் உதாரமானவை. இவர் காலத்தில் இந்தியர் கோரும் சீர்திருத்தங்கள் கிடைக்கலாம் என்று நினைக்க ஏதுவிருக்கிறது. அவரும் இந்தியாவுக்குக் கூடிய சீக்கிரத்தில் வரப்போவதாகவும் சொல்லியிருக்கிறார்.

*
* *

மேலும் நாளிது செப்டம்பர் ௴ 5ஆம் தேதியில் ஸிம்லாவில் மாகூஷிமை தங்கிய ராஜப்பிரதிநிதியவர்கள் சட்ட நிரூபண சபையில் செய்த பிரசங்கத்திலிருந்தும் நமது தலைவரவர்களை விடுதலை செய்வதாக சர்க்காரில் தீர்மானம் செய்திருப்பதாகத் தெரிந்தது. அதைப்பார்த்த உடன் இந்தியரனைவரும் சந்தோஷமடைந்தார்கள். இரண்டொரு நாளில் நமது அக்கிராசனர் வெளிவந்து விடுவார் என்ற மனக்கிளர்ச்சியும் உண்டாயிற்று. ஆனால் இன்னும் வெளியில் வரும்படி உத்தரவைக் காணோம்; ஆங்கில இந்தியப் பத்திரிகைகள் அன்னையவர்களை வெளியில் விடும் முன் சில உறுதிமொழிகளை வாங்கிக்கொண்டு தான் விட வேண்டும், என்று ஒரே பிடிவாதமாக வற்புறுத்துகின்றன. அன்னையவர்களோ யாதொரு உறுதிமொழியும் கொடுப்பார்கள் என்று தோன்றவில்லை. ஏன் என்றால் இனிமேல் அக்கிரமமாகப் பேசுகிறதில்லை யென்று உறுதி சொன்னால் முன் அப்படிப் பேசினதாக ஒத்துக்கொண்டதாகப் பொருள் படுகிறதல்லவா? இந்த நிலைமையில் எப்போது விடுதலையானது ஏற்படுமோ என்று மனது கவலையுறுகிறது.

*
* *

தற்கால ராஜாங்கங்களில் பெரும்பாலும் உண்மையான சூக்ஷ்ம திருஷ்டியில்லை யெனலாம். முற்காலங்களில் பெரியவர்களை சிறையில் வைத்தாலும் மற்றபடி அவமானப்படுத்தினாலும் அரசாக்ஷிக்கே கெடுதல் என்ற உணர்வு இருந்தது. ஆனால் ஆணவமும் நாஸ்திகமும் மிகுந்த இந்நாளில் அவ்வுணர்வு கிடையாது என்று சொல்லலாம்.

மேலும் அப்படியாராவது சொன்னாலும் அவனை பைத்தியம் பிடித்தவன் என்றும், மூடன் என்றும் நினைக்கிறார்கள். முற்காலங்களில் இருந்தவர்கள் மூடர்கள், நாம் தான் புத்திசாலிகள் என்று எண்ணும் காலமிது. ஆகையால் நாம் பின்னர்க் கூறும் வார்த்தைகளையும் யதார்த்தம் என்று மேல் நாட்டு நாகரீகத்தில் நம்பிக்கை வைப்பவர்கள் எண்ணுவார்கள் என்று நாம் எண்ணவில்லை. ஆனால் நமது பிரஹ்மஞான சபை அங்கத்தினர்களும் அபிமானிகளும் அங்ஙனம் நினையார்கள். நமது தலைவரவர்கள் அத்யாத்மஞானத்திலும், அனுபவத்திலும் தேர்ந்த கர்மயோகி. உலகத்தை யாளும் வெள்ளியம்பலத்தின் சேவகர். இவருக்குச் செய்யும் தீங்கும் அவமானமும் அவ்வம்பலத்துக்கே யல்லவா? அங்ஙனம் இருப்பதால் உலகத்துக்கே நன்மையாகதல்லவா? தற்காலத்தில் யுத்தம் நமக்கு அனுகூலமாவதற்குக்காரணம் நம்மவர் கக்ஷி நியாய கக்ஷியாயிருப்பது என்றும், ஆகையால் நிச்சயமாய் அனுகூலம் கிடைக்கும் என்றும் யாவரும் நம்பியிருக்கிறோமல்லவா? ஆகையால் அந்த நன்முடிவைத் துரிதப்படுத்தக்கூடிய காரணங்களைத் தேடுதலல்லவோ மதியூகிகளின் கடமை? மதங்களுக்கெல்லாம் பிறப்பிடமானதும் மதப்பிரவர்த்தகர்களுக்கு ஜன்ம பூமியும், வெள்ளியம்பலத்தமர்ந்துள்ள மஹாத்மாக்களனேகரால் தம் நாடென்று அன்புடன் பாவிக்கப்பட்டதும், கர்மபூமியுமாகிய இவ்விந்தியாவின் உபகாரத்திற்காக உழைத்துவரும் கர்மயோகியை இராஜாங்கத்தார் விடுதலைசெய்தால் இந்தியரனைவரும் திருப்தியடைவதுடன், லோகாக்ஷகர்களுடைய ஆசீர்வாதமும் கிடைக்கும். ஆகையால் இந்தயுத்தமும் நன்றாக முடிவுபெறும் என்பதில் தடையில்லை.

*
* *

நம் தலைவர் அடிக்கடி கூறியபடி இந்த யுத்தமானது மானிடரின் கிருத்தியமன்று. ஒரு குறிப்பிட்ட முடிவைச் சாதிப்பதற்காக மன்னர்களையும் மந்திரிகளையும் சைன்யங்களையும், கருவிகளாய் உபயோகிக்கும் ஸர்வ நியந்தாவான ஈசுவரனுடைய திருவிளையாட்டு. அவனது நியதியை சூக்ஷ்ம திருஷ்டியாலோ அல்லது மனோபாவனையாலோ அறிந்து

அதற்கு ஏற்ப நடப்பதே இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முறை. இங்கிலாந்தில் முதன் மந்திரியாயிருக்கும் லாயிட் ஜார்ஜ் என்பவர் அனுதாபமும் மனோ பாவனையும் மிகுந்த "வெல்ஷ்" ஜாதியிற் பிறந்த மஹானுபாவர். அவர்கள் செய்த உபந்யாசங்களைப் பார்த்தால் தீர்க்க திருஷ்டியும் ஆழ்ந்த அறிவும் உள்ளவர் என்று விளங்குகிறது. மேலும் ருஷியாவிலும் முன்னிருந்த ராஜாங்கம் போய் புதிதாய் ஓர் குடியரசு வந்திருக்கிறது. அக்குடியரசார்கொண்ட தீர்மானமும் சுயநலம் கருதாமல் உலக க்ஷேமகரமானது. அதாவது இந்தக் கோர யுத்தத்தின் முடிவில் ஒருவரும் ஒரு தேசத்தைத் தங்களுடைய ராஜ்யத்துடன் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்பதே. அமெரிக்காவும் யுத்தத்தில் சேர்ந்திருக்கிறது. அந்த ஐக்கிய நாடுகளின் பிரசிடெண்டவர்களும் சுயநலம் கருதாமல் யுத்தத்திற் சேர்ந்திருப்பதாகவும், நியாயத்தை நிலை நிறுத்துவதற்காகவே இந்த யுத்தம் நடத்தப்பட வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். ஜர்மானியரிடமிருந்து கைப்பற்றப் பட்ட நாடுகளில்கூட ஜனங்கள் எந்த ராஜாங்கத்தாரிடம் சேர இஷ்டமென்றோ அல்லது சுயாட்சியுடையவராயிருக்க இஷ்டமென்றோ சொல்லுகிறார்களோ அந்தப்படியே அவர் இஷ்டப்படித் தான் இருக்கவேண்டுமென்று எல்லா ராஜாங்கத்தாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். எல்லாவற்றையும் பார்த்தால் ஒன்றும் தற்செயலாய் நடக்கவில்லையென்றும், ஈசுவர சங்கற்பப்படி தான் நடக்கிறதென்றும் தோன்றவில்லையா? அப்படி யிருக்க நமது அம்மையவர்களைப் போன்றவரையும் கலந்து அவர்களுடைய ஞானத்தை யுபயோகப் படுத்துவது சரியா, அல்லது உண்மையான ராஜ விசுவாசமும் அந்த ராஜ விசுவாசத்தை மற்றவருக்கும் புகட்டக்கூடிய சாமர்த்தியமுள்ள அன்னவரை விரோதித்து அவமானப படுத்துவது சரியா?

*
* *

இந்திய ஸ்திரீகள் தற்காலக் கிளர்ச்சியில் தங்களுடைய முயற்சியையும் கலப்பதும் காலத்தின் பிரபாவத்தைக் காட்டுகிறது. பற்பல நகரங்களில் பிராமண ஸ்திரீ

கள், இதர ஜாதி ஸ்திரீகள், மஹம்மதிய ஸ்திரீகள், எல்லோரும், நம்முடைய தேசத்திற்கு உழைப்பதற்காகவும் புருடர் கொஞ்சம் அசிரத்தையாயும், அஞ்சியும், இருந்தால் அவர்களுக்கு தைரியமும், ரோசமும், உற்சாகமும் உண்டாகும்படி பேசியும், பத்திரிகைகளில் எழுதியும் வருகிறார்கள். அவர்கள் நன்மாதிரியைப் பார்த்த உடன் புருடர் மிக்க ஊக்கத்துடன் வேலை செய்யக் காரணமாகிறது. நமது தாய் விழித்துக்கொண்டு விட்டாள் என்பது நன்கு விளங்க வில்லையா?

மூவர் பந்தமுமற முன்னவன் அருளினான்!

இப் பத்திரிகை வெளிவரும் முன் நாம்கோரியபடி சந்தோஷ சமாசாரம் பத்திரிகைகள் மூலமாய் வெளி வந்து விட்டது. 17உ திங்கட்கிழமை இரவு 11 மணி 2 நிமிஷத்துக்கு, மூவருக்கும் முன்னர் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டது என்ற மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்களுடைய உத்தரவானது கொடுக்கப்பட்டது. அந்த சந்தோஷ சமாசாரமானது 18-ஆம் தேதி காலையில் தந்தி மூலம் கோயமுத்தூரிலிருந்து மதுரைக்கு வந்தது. எல்லோரும் ஆனந்த மடைந்தார்கள். இந்த சந்தோஷத்தை வெளியிடவும் அம்மையவர்களுக்கு நம்முடைய சந்தோஷத்தைத் தெரிவிக்கவும், 19-ஆம் தேதி மாலை 6 மணிக்கு மதுரை விக்டோரியா எட்வர்டு ஹாலில் பெரிய சபை கூடிற்று. ஜனங்களுடைய குதூஹலத்துக்கு அளவு மட்டில்லை. வெகு உற்சாகமாக அக் கூட்டத்தில் பேச்சுகள் நிகழ்ந்தன. அப்பால் கோவிலுக்குப் போய் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரானுக்கு அர்ச்சனைகள் நடத்துவதற்காக, ஊர் கோலம் புறப்பட்டது. மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் மன்னருடைய படமும், விடுபட்ட மூவருடைய படங்களும் ஒரு 'லாண்டலெட்' வண்டியில் வைத்துக் கொண்டுபோகப்பட்டன. போகுமிடமெல்லாம் ஜனங்கள் எவ்வளவு மூகோலாசத்துடன் அப் படங்களைக்

காண வந்தார்கள் என்பதும், அம்மையவர்கள் வெளி வந்த விஷயத்தைப் பற்றி எவ்வளவு சந்தோஷ மடைந்தார்கள் என்பதும், இவ் விடுதலையால் ஜனங்களுக்கு ராஜ விசுவாசம் எவ்வளவு மிகுந்து விளங்கிற்று என்பதும் பார்த்தவர்களுக்குத் தான் நன்றாய்த் துலங்கும். இங்ஙனமே பற்பல நகரங்களிலும் விழாக்கள் நடந்தன வென்றும் பத்திரிகைகள் மூல மறிகிறோம்.

* * *

21-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சென்னைக்கு அம்மையவர்கள் வந்துசேருகிறதாயும், அவர்களை நல்வரவு கூறி அழைக்க விசேஷ ஏற்பாடுகள் செய்து இருப்பதாயும் தெரிய வருகிறது.

அம்மையவர்களுக்குப் பழய தேக ஆரோக்கியம் சீக்கிரம் கிடைக்குமென்றும், முன்னர் போலவே பிரஹ்மஞானத்தையும் இதர ஞானத்தையும் பரவச் செய்து உலகினை மேம்பாடுறச் செய்வார் என்றும் நம்புகிறோம்.

* * *

இந்தியாவில் ராஜீய சீர்திருத்தங்களைப் பற்றி வற்புறுத்திப் பேசினதற்காக நிர்ப்பந்திக்கப்பட்ட இதர இந்தியர்களையும் விடுவிக்கப் போவதாகவும், ராஜப் பிரதிநிதியவர்களுடைய, உபந்யாஸத்திலிருந்தும், இங்கிலாந்திலிருந்து வந்த சமாசாரத்திலிருந்தும் தெரிய வருகிறது. அதுவும் வாஸ்தவமானால், நமது அன்னையவர்கள் அடைந்த நிர்ப்பந்தத்திலிருந்து, மற்றவர்களும், அவர்கள் மூலம் இந்தியாவும், மிகவும் விசேஷமான பிரயோஜன மடைந்ததாகிறது.

நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லா ரொருவருளரேல் அவர் பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை.

ஆர். ரெங்கஸ்வாமி ஐயர்.

பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்.)

அத்தியாயம் 22.

மனிதசரீர அமைப்பு:—ஸ்தூலசரீரம்.

நாம் அதிகமாயறிந்திருக்கும் சரீரம் ஸ்தூல சரீரம். உண்மையாகவே சிலர் ஸ்தூல சரீரத்தை மாத்திரம் அறிவார்கள். இதர சரீரங்களைப்பற்றி நாம் பேசினால் இவர்கள் நம்மைப் பார்த்து சிரிப்பார்கள். பிரஹ்மக்ஞான சங்கத்தைச் சேர்ந்த நாம் இதர சரீரங்களைப்பற்றிக் கற்றுக்கொள்ளவேண்டும். அதாவது அச்சரீரங்கள் நமக்கேன் கிடைத்திருக்கின்றனவென்பதையும் அவைகளை நாம் எப்படி உபயோகப்படுத்தவேண்டுமென்பதையும் நாம் கற்றுக்கொள்ளவேண்டும். அச்சரீரங்களைப்பற்றி யாதொன்றும் கற்றறியாதவர்கள் நம்மைப்பற்றிச்சொல்லுவதை நாம் கவனிக்கவேண்டியதில்லை.

ஸ்தூல சரீரத்தை மட்டும் நம்முடைய சரீரமென்று பேசுகிறோம். ஏனெனில் நமக்கு வேறே சரீரங்களிருப்பது தெரியாது. அச்சரீரத்தினால் தான் நம்முடைய சினேகிதர்கள் நம்மையறிகிறார்கள். இதர ஜனங்களை அதன் மூலமாய்த் தான் நாமும் அறிகிறோம். இந்த சரீரம் நானல்ல அந்தசரீரம் நீயல்ல என்று வெகு லெகுவாய்ச்சொல்லலாம். இது உண்மை என்று நம்மில் அநேகர்களுக்குத் தெரிகிறது. ஆனால் இச்சரீரத்தினாலன்றி வேறே விதத்தினால் நாம் ஒருவரையொருவர் அறிந்துகொள்வது எவ்வளவு துர்லபமென்பதை நாம் ஆழ்ந்து பார்த்தால்தான் தெரியும்.

உன் தாயார் கருத்தகூந்தலையும் கபில நிறமுள்ள கண்களையும் ரோஜா நிறமுள்ள கன்னங்களையும் சதைப்பற்றுள்ள சரீரத்தையும் உடையவளென்று வைத்துக்கொள்வோம். ஒரு நாள் அவள் மஞ்சள் நிறமுள்ள கூந்தலையும் நீல நிறமுள்ள கண்களையும் வெளுத்த கன்னங்களையும் உடைய, மெலிந்த உயரமான சரீரத்துடன் வந்தால் அச்சரீ

ரத்தில் உன் தாயார் இருப்பதாக நீ ஒருக்காலும் நம்பமாட்டாய். நாம் எப்போதும் ஸ்தூல சரீரத்தை நேசியாவிடினும் அதன் மூலமாகத்தான் நாம் ஒருவரையொருவர் தெரிந்துகொள்ளுகிறோமென்பதை நீயறிகிறாய். சரீரத்தில் வசிக்கிற ஆத்மாவை நாம் நேசிக்கிறோம். வரவர எந்த சரீரத்தின் மூலமாக நாம் ஆத்மாவை அறிகிறோமோ அந்த சரீரத்தையே நேசிக்கவாரம்பிக்கிறோம்.

உன்னுடைய சரீரம் உன் வீடென்பதையும், அது நீயல்லவென்பதையும், அது இறந்துபோன பிறகும் நீவெகு காலம் ஜீவிப்பாயென்பதையும், இப்போதுள்ள சரீரம் நசித்துப்போகும்போது வேறு சரீரத்தை நீயடைவாயென்பதையும், அந்தச் சரீரமும் நசித்துப்போய் அல்லது தற்செயலாயாவது வியாதியினாலாவது சொல்லப்படுமே வரை நீயதில் வசிப்பாயென்பதையும், எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்.

சிலஜனங்கள் தங்கள் சரீரங்களிடத்தில் அதிகப் பற்றுதல் உள்ளவர்களாயிருப்பதால் அவைகளின் இஷ்டப்படி நடக்க அவைகளை விட்டுவிடுகிறார்கள். அவைகளுடைய இச்சைப்படிக்கெல்லாம் அவைகளுக்குக் கொடுத்து அவைகளை உபயோகமற்றவைகளாகவும் நோயுள்ளவைகளாகவும் செய்துவிடுகிறார்கள். இது மிகவும் மூடத்தனம். நோய் பற்றிய சரீரம் நமக்கு இடையூறு விளைவிப்பதுடன் மனக்கிலேசத்தையும் கொடுக்க ஏதுவாயிருக்கும்.

நம்முடைய சரீரங்களுக்கு ஏராளமான வேலையும், நல்ல ஆகாரமும், சுத்தமும், இளைப்பாறுதலும், தூக்கமும், நல்லகாற்றும் வேண்டும். அவைகளுக்கு மனதென்பது இல்லாமையால் அவைகளுக்கு வேண்டிய விஷயங்களைப்பற்றி நாமே நினைத்து அவைகளையடையும்படி செய்யவேண்டியது நம்முடைய கடமை.

இவைகளை எல்லாம் அறிந்து நாம் அதிகப் பிரியத்தினாலாவது அசட்டையினாலாவது கொடுமையினாலாவது சரீரங்களைக் கெடுக்கக்கூடாது. அவைகள் நமக்கு அத்தியந்

தம் அவசியமானவைகள். நமக்குள்ள உத்தமமான வேலைக்காரர்கள். ஆனால் அவைகள் பிராணிகளாக மாத்திரம் இருக்கின்றன. அவைகளைப்பற்றி நாம் கவலை எடுத்துக் கொண்டால் அழகான மானிடப் பிராணிகளாகும். மற்ற பிராணிகளைப்போலவே அவைகளையும் சௌக்கியமாகவும் நன்றாய் வேலை செய்யக்கூடிய ஸ்திதியிலும் வைத்துக் கொள்ளவேண்டும். அவைக ளில்லாவிட்டால் பூலோகத்தை நாம் ஸ்பரிசிக்க முடியாது. அதாவது நம்மைச் சுற்றிலுமுள்ள வஸ்துக்களைத் தொடவும், ருசி பார்க்கவும், கேட்கவும், உணரவும், பார்க்கவும் முடியாது. புல்லின் மரகதப்பச்சை வர்ணத்தையும் புஷ்பங்களின் விசித்திர நிறத்தையும் பார்க்க வியலாது. வானம்பாடி நீலவர்ணமுள்ள ஆகாயத்தில் உன்னி உன்னி மேலே பறந்துகொண்டு இனிமையாய்ப் பாடுவதைக் கேட்கவும் முடியாது. மேலும் அருவிகள் தூரத்தில் வெள்ளிக் கொடிபோல் பிரகாசித்துக் கொண்டு சூரியகிரணங்களால் ஜ்வலித்துக்கொண்டு கீழ்நோக்கி ஓடி நீலவர்ணமுள்ள பெரிய சமுத்திர அலைகள் பாறைகளின்மேல் மோதுகிற இடத்தை வந்தடைவதையும் அந்த அலைகளின் சிகரத்திலுள்ள பனிக்கட்டிபோன்ற வெண்மையான நுரைகளால் அந்தப் பாறைகள் மூடப்படுவதையும் நாம் கண்ணுற்று ஆனந்திக்கவும் முடியாது.

நம்முடைய ஸ்தூலசரீரங்கள் இல்லாவிட்டால் பூலோகத்திலுள்ள அழகான பொருள்யாவும் நமக்குத் தெரியமாட்டா. அவைகள் நமக்குப் போதிப்பதான சிறந்த விஷயங்கள் யாவற்றையும் நாம் இழந்துவிட வேண்டும். உன்னுடைய ஸ்தூல சரீரத்தைப்பற்றிக் கவலையெடுத்துக்கொள். நீ எப்படி ஒரு பிராணியிடம் அன்பு பாராட்டி அதைப் பழக்குவாயோ அதேமாதிரி சரீரத்தினிடத்தில் அன்பு பாராட்டி அதைப் பழக்குவாயானால் அது நல்ல ஊழியனாக விருந்து உனக்குத் தகுந்த பிரதி உபகாரம் செய்யும்.

வி. வெங்குசாமி ஐயர்.

தமிழபிமானிகட் கோர் விண்ணப்பம்.

தற்காலம் உலகின் எல்லாப்பாகங்களிலும் ஆடவரும் மகளிரும் ஓர் பொது நோக்கிற் கட்டுண்டு, பரபரப்பா யுழைத்து வருகின்றனர். ஐரோப்பிய அமரிக்க நாடுகளை நோக்குமின். ஐரோப்பிய மக்களிற் பலர், யுத்த ஆரவாரத்திற் சிக்குண் டிருக்கும் ஆடவர்க்குப் பலவாறு உதவி புரிகின்றனர்; காயமடைந்தோர்க்குச் சிகிச்சை செய்கின்றனர்; பசிதாகங்களால் வருந்துவோர்க்கு அன்னபானாதிகள் அளிக்கின்றனர்; ஆடை யளிக்கின்றனர்; அவர்களிற் பலர் தேச வித்தியாசம், பாஷை வித்தியாசம், ஜாதி வேற்றுமை முதலியவற்றைக் கருதாது, பொதுவாய் மனித வர்க்கத்திற்கே அன்பு பாராட்டி யாதரிக்கும் சிறப்பு வாய்ந்துள்ளார். இவ்வியுத்தத்தில் அமரிக்கர் சம்பந்தங்கொள்ளற்கு வெளிப்படையான காரணங்கள் பல அவ்வவர் நிலைமைக் கேற்பத் தோன்றுமாயினும், அமெரிக்கர் தமக்குத் தோன்றிய அநீதியைத் தடுத்து நீதியை நிலைநாட்டவும் தம் தற்கால நிலைபரத்தைத் தாண்டி பிற்கால முன்னேற்றத்தை யடையவும் யுத்தத்திற் கலந்துளா ரென்பது உண்மை.

ஜப்பானியர், சீனராதிய மஞ்சட் ஜாதியாரைப் பாருங்கள். அத்தேச மகளிரும் புருடரும் கல்வி, கைத்தொழிலாதியவற்றில் எத்துணை மேலோங்கி யுள்ளார்! யுத்தத்தில் அதிகம் கலவாது, சற்று விலகினர் போன்றுள்ள அவர்களின் கைத்தொழிற் சாமான்கள் ஏராளமாய் நம் நாட்டில் இறக்குமதியாகி விலையாவதை யறிகிறோம். நீக்ரோயர் என்னும் கரிய ஜாதியாரைக் காண்மின்! அவ்வினத்து மகளிரும் வைத்திய சாஸ்திர நிபுணர்களாயும், நியாயவாதிகளாயும் இருக்கிறார்களன்றோ? பொதுவாய் நாம் உலகினை நோக்குங்கால், அது முன்னேற்றத் துறையில் இறங்கியிருத்தல் புலப்படாமற் போகாது. தென்னாடு வடநாடென்னும் இரண்டு பிரதான பிரிவுகளால் விளங்கும் நம் தாய் நாட்டின் செய்தி யாது? அஃது சின்னாட்களுக்கு முன்னர் இருந்தாற்போலன்றி, பல மாறுதலுற்று வருதல் வெளிப்படை,

ஆயினும், தென்னாட்டின் கதி கூர்மகதியென்றும், வடநாட்டின் கதி துரககதி யென்றும் சொல்லப் பெறுகின்றது. அதிலும் தமிழ்நாடு நத்தைபோலூருகின்றதென்றே சொல்லத்தகும். தமிழ்நாட்டின் அமைப்பே அத்தகையதோவெனில், ஒருபோதுமன்று. நம் நாடு எத்தனை தெய்வத்தன்மை வாய்ந்த பண்டிதர்களானும் பண்டிதைகளானும், மேன்மை வாய்ந்த மன்னர்களானும், சங்கங்களானும், ஞானிகளானும், பக்தர்களானும், பக்தைகளானும், வீரர்களானும், சிற்பமாதிபல தொழில்வல்லோரானுஞ் சிறந்து விளங்கிற்று! ஜாதிப் போராட்ட ஊழிக் காற்றுகள் தோன்றி அதனை நிலைகுலைத்த காலத்தும், சில பெரியார் அவதரித்து, அநேக ஜாதியாரை யொருங்கு சேர்த்து வைணவரென்றும், அவ்வாறே அநேக ஜாதியாரைச் சேர்த்து சைவரென்றும் ஒருவாறு எல்லையமைத்து, மதமென்னும் பிணையலில் பல ஜாதி வைணவரும் ஓர் குடும்பத்தார் போலவும், பல ஜாதி சைவரும் ஓர் குடும்பத்தார் போலவும் தமக்குள் அன்பு பாராட்டி, சாந்தசமாதி குணங்களோடு விருத்திபெற வழி காட்டினர்.

அன்றியும், இப்பெருங் குடும்பங்களான மதங்களுக்கிடையிற் போராட்டம் நிகழாவண்ணம் சிற்சில அணைகோலினர். இவை, ஆங்காங்கு பெரிய மாலைகளின் இடையேயுள்ள ஒளிமணிகளென்ன தேவார, திருவாசக, திருவாய்மொழிப் பாசுரங்களில் காணப்பெறுகின்றன. மேலும் ஸ்ரீமத் ராமாநுஜாசாரியார் முந்நூற்றுச் சில்லறை யம்மையார்களை நியமித்து, அன்னோரிடம் கிரந்த வியாக்கியான முதலிய பாடங் கேட்டுக்கொள்ளுமாறு ஸ்திரீகளையும் புருஷர்களையும் விதித்தனர். திருநாராயண புரத்தில் பஞ்சமர்களை அவர் கௌரவித்துக்காட்டிய சிறப்பு எத்துணைமாண்புள்ளது! ஸ்திரீகளையும், தாழ்ந்த ஜாதியாரையும் அடிமைச் சிறையாளிகள் போற்பாவிக்க அவர் இடந் தந்திலரன்றே! பலஜாதி ஸ்திரீபுருடரான பக்தர்களை ஆலயங்களில் விக்கிரகங்களாய் வைத்துப் பூசிக்கும் ஆற்றலுள்ள நம்மனோரின்

நடை மாறுதற்குக் காரணமென்னை? நாம் இன்னிசையாய்ப் பாடும் பாடல்களின் கருத்திற்கு நம் செய்கை முரணுத லேன்? நம்மிற் பலர்க்கு மனம் வேறு, சொல்வேறு, மன்னு தொழில் வேருயிற்றென்க!

என்னை! இத்தமிழுலகில் வித்வசிகாமணிகள் யாவரை யும் ஒருங்கு சேர்த்து, தமிழ்நாட்டை யுய்விக்கவந்த தமி ழ்ச்சங்கப்பொதுநோக்கு என்னுயது!! யாவரையும் எழுப்பி காலதேசத்திற் கிணங்கத் திருத்த முறைகளை யுணர்த்தி, உற்சாகமூட்டி, நம்முயர் நலத்தை நாடும் தமிழ் பத்திரிகை கள் நம்மில்லங்களிற் புகாமை யென்ஞே!! தமிழபிமானி களே! விழிமின்! எழுமின்! முன்னேக்கி நடமின்! தமிழ ணங்கைப் பேணுமின். அவளது மக்களை நோக்குமின். தர்க்ககேசரிகாள்! இனிய பிரசங்கிகாள்! நாம் முன்னேறு வண்ணம் இடையிடையே குறுக்கிடும் மதில்களைத் தகர் மின்! எழுத்தாசிரியர்காள் நும்வலிய லேகினியாலச் சுவர் களைச் சிதைமின்! செல்வர்காள்! நும் ஈகையெனு மஸ்தி ரத்தால் பகைவர்களைப் போக்குமின்!

உலகின் ஆரவாரம் தமிழணங்கின் நித்திரையைக் கலைக்க வியலாதாயின், தமிழ் மாதினை யெழுப்பி, நன்னிலை யிலோங்கச் செய்ய குறுமுனிவர் வருவரோ! தமிழபிமானி கள் நம் நாட்டின் உயர்வை நிலைபெற்றோங்கச் செய்வதில் நன்ருய்ச் சிந்தித்து, ஒற்றுணர்ச்சிபூண்டு, தத்தம் திறமைக் கேற்ப பொது நோக்குடன் முயல்வாராயின், நம் நாடு அதி விரைவில் உயர்வுறும். நம்மில்லங்களிற் றமிழ்மணங் கம ழும். காலதேசங்களுக் கேற்ற நாகரிகம் பரவும். தமிழ ணங்கின் புதல்விகள் யாவரும் பத்திரிகாபிமானிகளாவர். நம்மாது மணிகள் பெருந்தகைக் குணங்களையும் சுகாதார முறைகளையும் உணர்ந்து, அன்பின்வழி நடவாநிற்பர். அன் னேர் கைக்குழவிகளும் உயர் குணம்படிய சுகசரீரிகளா யோங்குவர். பத்திரிகாபிமானிகளே! நுஞ்சிறு முயற்சிகளை யிவ்வகையிற் பயன்பெறச் செய்து தமிழ் மாதினைப் பேணு மின்.

அ. நம்மாழ்வார்.

நக்ஷத்திரப் பிரகாசம்.

(58-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஸரஸ்வதி:—நமஸ்காரம்! என் தம்பி ஜயராமனையும் இன்று தங்களிடம் அழைத்து வந்திருக்கிறேன். அவனும் ஓர் நக்ஷத்திர சேவகனுகச் சேர்ந்திருக்கிறுன. அவன் தங்களோடு சில வார்த்தைகள் பேச விரும்புகிறுன்.

மீனுக்ஷி:—நல்லது, சந்தோஷம். ஜயராம்! அருகேவா. நக்ஷத்திர ஸங்கம் என்ன நோக்கத்திற்காக உலகில் ஏற்பட்டிருக்கிறது, தெரியுமா?

ஜ:—"சமீபத்தில் ஒரு லோககுரு வரப்போகிறுர்" என்னும் செய்தியை உலக முழுமையும் பரவச்செய்வதற்கு ஏற்பட்டுளது, என்று கேள்விப்பட்டேன். ஆயினும் லோககுருவென்பவர் இன்னுரென்று எனக்குத் தெளிவாய்த் தெரியவில்லை தயவு செய்து சொல்ல வேண்டுகிறேன்

மீ:—லோககுரு என்ருல், உலக முழுமைக்கும் குரு என்றர்த்தம். நம்மவர் சிருங்ககிரி பீடத்து ஆசார்யரை லோககுரு என்று சொல்லுகிறுர்கள். ஹிந்துக்களில் அத்வைத மதஸ்தர்கள் மட்டும அவரைக் குருவாய் கொள்வார்களே யன்றி, உலகமுழுமைக்கும் அவர் குரு அல்லர். இதே மாதிரி ஒவ்வொரு மதஸ்தரும அவரவர் குருவை லோககுருவென்று சொன்னுலும், உண்மையில் அவர் லோககுருவாகமாட்டார். உலகத்தில் உள்ள எல்லா மனிதரும் ஸ்திரீகளும் அறிவிலும், அன்பிலும் ஒழுக்கத்திலும் மிகத் தாழ்ந்தவர்கள் முதல் மிகப் பெரியவர்கள் வரை எல்லோரும் எவரிடத்தினின்று கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறதோ, அவர்தான் உண்மையில் லோககுருவாவார்.

ஜ:—அவர் இப்போது எங்கே இருக்கிறுர்? எப்படி இருப்பார்? அவரை நாம் எப்படித் தெரிந்துகொள்வது? என்ன உருவமாய் உலகத்திற்கு வருவார் என்பதைச்சற்று விவரமாய்ச் சொல்லுங்கள்.

மீ:—அவர் இப்போது மறைவாயிருந்து உலகத்தின்
அபிவிருத்தியை நடத்துகிறார். மிகக் காந்தியான சரீரத்
தோடு அவர் ஹிமாசலத்தில் வசிக்கிறார். அவரைப்பார்
த்தால் இவ்வுலகத்தில் வேறொன்றையும் நாம் வேண்டோம்.
அவ்வளவு அழகை உலகில் வேறொன்றினிடத்திலும் நாம் கா
ணக்கூடாது. ஜனசஞ்சாரமுள்ள இடங்களில் அவர் வரு
ம்போது அக்காந்தியான சரீரத்தோடு வரமாட்டார். நாம்
சொக்காய்களைக் கழற்றிவைப்பதுபோல், அவர் தம்மு
டைய காந்தியான சரீரத்தைத் தமது ஆசிரமத்திலேயே
கழற்றி வைத்துவிட்டு, நமது உலகத்தில் பரிசுத்தமும்,
உபசாரமுமான வாழ்க்கையோடும் நல்ல சீலத்தோடுமுள்ள
தமது முக்கிய சிஷ்யர் ஒருவர் சரீரத்தைத் தமது சரீரமாக
உபயோகப் படுத்திக்கொள்வார். அச்சமயம் நாம் அவரை
ஒரு சாதாரண மனிதராகவே எண்ணிக்கொண்டிருப்போம்.
ஆகையால் அவர் உருவத்தைப்பார்த்துத் தெரிந்துகொள்ள
முடியாது. நாம் அவர் குணங்களைக் கவனித்துத் தெரிந்து
கொள்ளலாம். அவர் அனந்த கல்யாண குணங்களையுடைய
வரானாலும், மூன்று குணங்களில் அவர் பூரணம்பெற்றவர்.
அம்மூன்று குணங்களிலும் ஒரு சிறு திவலையையாவது நம்
சீலத்தில் அமைத்துக்கொண்டால் தான், குணங் கண்டறி
யும் ஞானக்கண் நமக்குத் திறக்கும். அப்போதுதான்
அவரை அறிவோம். நாம் எவ்வளவுக்கெவ்வளவு பக்தியா
யும், சாந்தமாயும், மநவுறுதியாயுமிருக்கிறோமோ, அவ்வள
வுக்கவ்வளவு, நம் ஞானக்கண் திறக்கும் அவர் வருங்காலத்
தில் அவரைத் தெரிந்துகொண்டு நல்வரவேற்குமாறு தான
நம்மையும் பிறரையும நாம் ஆயத்தப்படுத்தவேண்டும். இப்
போது முதலே பிறரிடத்திலுள்ள குணங்களை மட்டும்
கண்டு வியந்தும், தோஷங்களை விலக்கியும் வருவோமாக.
சுருங்கச் சொல்ல, எதெதைச் சுத்தமாயும, அழகாயும்,
வைப்பீர்களோ, அதிலெல்லாம் அவர் பிரகாசிக்கிறார். நல்
லெண்ணங்களால் உங்கள் மனதைச் சுத்தமாயும், அழகா
யும், வைத்துக்கொண்டால், உங்கள் மனதில் அவர் பிரகா
சிக்கிறார். உண்மையும் மதுரமுமான வார்த்தைகளால்

உங்கள் வாக்கைச் சுத்தமாயும், அழகாயும், வைத்துக்கொண்டால், உங்கள் வாக்கில் அவர் பிரகாசிக்கிறார். உங்கள் முகங்களையும், உடைகளையும், புத்தகங்களையும், நீங்கள் இருக்கும் இடங்களையும், தோட்டங்களையும், சுத்தமாயும், அழகாயும், வைத்துக்கொள்க. அப்போது அவர் அவைகளில் பிரகாசிப்பார். பிறருக்கு உபகாரமாய் எதை எதைச்செய்கிறீர்களோ, அதிலெல்லாம் அவர் பிரகாசிக்கிறார். நமது தேசத்திற்காகப் பாடுபடும் பரமோபகாரிகள் பலரிடத்திலும் அவர் பிரகாசத்தைக் காணலாம். இன்னும் உலகத்தில் எத்தனையோ துறைகளில் முன்னேற்றத்தை விளைத்துக் கொண்டிருக்கும் சாமர்த்தியசாலிகளிடத் தெல்லாம் அவர் பிரகாசத்தைக் காணலாம். இது எல்லோராலும் தீடீரென்று கூடாது. அவர் பிரகாசத்தைக் காணும்படி நாம் வெகு நாளாய்ப் பழகவேண்டும். மேற்கூறியபடி நடந்து விடுவீர்களானல், அப்பழக்கம் நிறைவேறும். இப்பழக்கத்தைத்தான் தபஸ் என்று சொல்லுவோம். விசுவாமித்ர மஹரிஷி தசரத சக்ரவர்த்தியிடம் வந்து, ஜகத்தின் உபகாரநிமித்தம் ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியை யாசிக்க அச்சமயம் அவர் மறுக்க, "ராமன் நிஜபராக்ரமசாலியென்று நான் அறிவேன். வஸிஷ்டரும், மஹாகாந்தியோடு கூடிய தபஸ்விகளும் இன்னும் பலரும் அறிவார்கள்." என்றார். அதில் தபோபலமின்றி மஹா புருஷர்களையறிதல் அசாத்தியம் என்னும் சூசகம் உள்ளதாக ராமாயணவியாக்யாதா ஸ்ரீ கோவிந்தராஜர் எழுதியுள்ளார். நமது முன்னோர்களின் வழியையே உதயதிசை நக்ஷத்திர சங்கம் வற்புறுத்துகிறதல்லாமல், புதிதாகவும் வேறாகவும் ஒன்றையும் கூறவில்லையென்று அறிவாயாக.

ஜ:—மறைவாயிருந்தும் அவர் உலகத்தின் அபிவிருத்தியைக் கவனித்து வருகிறாரென்றால் அவர்நமக்குள் வந்து சஞ்சரிக்கவேண்டிய அவசியமென்ன ?

மீ:—இது நல்ல கேள்வி. லோககுருவானவர் நம் தாயாருக்குச் சமானம். அவர் குழந்தைகளாகிய நாம் பலம் பெறுமாறு, நாமே அநுபவம் பெற்று ஞானம் பெறுமாறும் நம்மைத் தனியேவிட்டபோதிலும் பின்னிருந்து கவனித்துக்கொண்டேயிருக்கிறார். நாம் நடக்கையில் ஆபத்து வரும்போல் தோன்றினல் உடனே தாயார் வந்து நம்மைத் தூக்குகிறதில்லையா? அதே மாதிரி பகவான் பின்னிருந்து நம் உலகத்தைக் கவனித்துக்கொண்டே இருக்கிறார். உலகத்தில் சீர்கேடு ஏற்படும் என்று அவர் கண்டால், உடனே விரைந்து அவதரிக்கிறார். தற்காலத்தில் உலகமானது பற்பல வகைகளிலும் மிகவும் கோரமாய் நலங்குலைந்திருகிறதே. அவரை ஆபத்பந்து என்று நாம் அழைக்கிறோமல்லவா? அவர் நிச்சயம் ஆபத்தில் உதவுவார். ஸ்ரீ சங்கராசார்யார் விஷ்ணு பாதாதி கேசாந்தஸ்தோத்திரத்தில் "விஷ்ணுவின் அம்சாவதார மூர்த்திகள் உலகத்தில் தர்மத்தை நிலை நிறுத்தும் பொருட்டும், உலக ஹிதத்தைச் செய்பவர்களாயும், கருணையின் பாரத்தைத் தாங்கமாட்டாமல் ஸ்தூல உலகில் அவதரிக்கிறார்கள்" என்று கூறியிருக்கிறார்.

ஜ:—அவர் வருவதற்கு நாம் ஏன் பிரயத்தினம் செய்ய வேண்டும்?

மீ:—நாம் பிரயத்தினம் செய்வது நமது பாக்கியம். "அழுதபிள்ளை பால் குடிக்கும்" என்று கேட்டிருப்பாயே. அவர் வருவார் என்பதை சாஸ்திரங்களின் மூலமாகவும், உலக சரித்திரத்தின் மூலமாகவும் பெரியோர்களின் மூலமாகவும் நாம் கேட்டும் சும்மாயிருந்தால், நமக்கு வேறு துர்ப்பாக்கியம் என்ன வேண்டும்?

ஸ:—தற்காலத்திலும் கூட ஆண்மக்கள் "அடுப்பூதும் பெண்டிருக்கும் படிப்பெதற்கு" என்றும் "ஸ்திரீயின் ஆதிபத்யத்தால் நடந்துவரும் உங்கள் சங்கத்தில் எமக்கு அபிமானமில்லை" யென்றும் கூறுகிறார்கள். நம்மை நிந்தனையாகவும் பேசுகிறார்கள்.

மீ:—இது உலக இயற்கைதான் எப்பெருங்காரியத்தையும் ஆரம்பிப்பவர்களை உலகம் நிந்திப்பது புதிதல்ல. ஆக்ஷேபணைகளுக்கு நாம் பொறுமையோடும் முகமலர்ச்சியோடும் சமாதானஞ் சொல்லவேண்டியவர்களேயாம். இதற்கென்ன சமாதானம் சொன்னாய்?

ஸ:—"சுயநலம் பாராட்டாமல் நமது சங்கத்திற்காக உழைக்க முயன்றும் நம்மைப் பொல்லாங்கு பேசுகிறார்களே" என்ற வருத்தத்துடன் திரும்பிவிட்டேன்.

மீ:—ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொன்ன ஓர் ரகசியத்தை நீயறிவாயானால், இவ்விதம் வருத்தப்பட நியாயமில்லை. சுயநலந்துறந்து உழைக்கையில் ஜயம் வந்தாலும், அபஜயம் வந்தாலும் நமக்கல்ல. அவருக்கு நான் வேலைக்காரி. பூர்ணமான சிரத்தையோடு நான் உழைக்கவேண்டியது மட்டும் என் கடமை, என்று நீ உணர்வாய். ஸ்திரீகளுக்கும் புருஷர்களைப்போலவே மூன்று சரீரங்கள் உள்ளனவென்றும், அம்மூன்று சரீரங்களையும் அவர்கள் நேர்மையாய் உபயோகிக்குமாறு அறிவும், அன்பும், பரோபகாரமும் அவர்களாலும் கைக்கொள்ளப்படவேண்டியது அவசியமென்றும் உணராதவர்களே அங்ஙனம் கூறுவர். இவ்வுலகநிலையில் புருஷர்களின் தொழில் வேலைசெய்து சம்பாதிப்பதானால் ஸ்திரீகள் அதைப் பத்திரப்படுத்தி ஆகாரம் சமைத்தல் அவர்களுக்கேற்ற தொழிலாகும். ஆயினும், ஸ்திரீயானாலும், புருஷனானாலும், அறிவும் அன்பும் இருவர்க்கும் ஒன்றுபோலவே அவசியம். ஸ்திரீ புருஷபேதம் நமது ஸ்தூல சரீரத்திற்கு மட்டுமேயாகையால், ஸ்தூல சரீரம் சம்பந்தப்பட்டமட்டில் நாம் வேற்றுமை கொண்டாலும் அன்பும் அறிவும் பிரகாசிக்கும் ஸூக்ஷ்ம சரீரங்கள் ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் முற்றிலும் ஒரே மாதிரிதான். ஆகையால் புருஷர்களிடத்தில் ஸ்திரீகளாகிய நாம் மிதமிஞ்சிய வித்தியாஸ புத்தி பாராட்டுதல் அழகல்ல. அதிகமான வித்தியாச புத்தியாலல்லவோ, அதிக சங்கோசங்கொள்கிறோம். சங்கோசத்தையே பெருக்கிக்கொண்டு போக, இடைவெளி

அதிகமாகிறது. பரஸ்பரம் நேர்மையான அறிவும், அன்பும், ஏற்படுகின்றதில்லை. நிர்ப்பயமான அன்பும், விசாலமான அறிவும் நந்தேசத்தாருக்குள் பரவ இடமில்லை ஸ்திரீகளுக்கு ஸ்வதந்திரம் கொடுக்கிறார்களில்லையென்று புருஷர்களையே நாம் குறை கூறிக்கொண்டிருப்பதும் அழகல்ல. தவிரவும், பரமாசார்யார் வருகையைப் பிரஸித்தப்படுத்தும் விஷயத்தில் சங்கோசப்படுவது பெரும்பாபமேயாகும். "பரமாசார்யர் ஒருவர் சமீபத்தில் வருகிறார்." என்று கேட்டவுடன் எவருடைய உள்ளம் பூரித்து, "அவர் இப்போதே வரமாட்டாரா, உலகத்தில் தர்மத்தை நிலைநிறுத்தாரா" என்று இது பற்றிய விஷயங்களை இன்னும் அதிக ஆவலோடு எவெரெவர் அறியவிரும்புவாரோ, அவரிடத்திலெல்லாம் அச்சமயம் நக்ஷத்திரம் பிரகாசிக்கிறதென்று அறிவாயாக. இவ்விஷயமானது ஜனங்களுடைய உள்ளுணர்வைக் கிளப்புகிறது. உள்ளுணர்வான பக்தியில்லாதவர்களுக்கு நாம் எத்தனைதரம் சொன்னாலும், இது அவர்கள் காதிற்கூட ஏறுகிறதில்லை. ஆகவே நம் சங்கத்திற் சேர்ந்திருப்போர் யாவரும் தம்மிடம் உள்ளுணர்வாய் மறைந்திருந்த இவ்விஷயத்தை இப்போது பிரபலப்படுத்தி வருகிறார்கள். நம்மிடம் மறைவாயிருந்த மணி விளக்கை ஏற்றி நம்முடைய உபயோகத்திற்குமட்டுமோ வைத்துக்கொள்வது? நம்முடைய பிரயோஜனத்தை மட்டும் கருதுவது நியாயமா? எவ்விஷயத்தையும் தமக்குமட்டும் என்று வரையறுப்போமானால், மனிதர்களில் மிருகங்களேயாவோம்.

ஸ:—இன்னும் சில சம்சயங்கள் எனக்குள்ளன அவற்றையெல்லாம் தங்கட்குச் சாவகாசமாய்த் தெரிவிக்கிறேன். இன்று நேரமாயிற்று நாங்கள் விடை பெற்றுக்கொள்கிறோம்.

ஸ்ரீ:—நல்லது போய் வருக.

ஜகத்குருதாஸன்.

நாம் யார் என்று விசாரிப்பது அவசியம்.

சகலரிடத்திலும் நான் நானென்று ஓர் வார்த்தையானது விவகரிக்கப்படுகிறதைக் காண்கிறோம்.

1. இந்த 'நானாவது' சரியான ஸ்திதியிலிருக்கிறானா அல்லவா?

2. அப்படி சொந்த ஸ்திதியிலிருந்து நழுவியிருந்தால் மறுபடியுஞ் சுயஸ்திதிக்குக் கொண்டுவரக் கூடுமா அல்லது கூடாதா?

3. சுயமாம் ஸ்திதிக்குக் கொண்டுவந்தாலும், அதிலிருந்து நழுவாமலிருக்கக்கூடுமா கூடாதா?

4. இந்த நான் என்பவனை விசாரிப்பதினாற் பிரயோஜனமென்ன, விசாரியாமையால் கெடுதலென்ன?

5. இந்த நான் சுயமான ஸ்திதியை விட்டு நழுவுகிறதற்குக் காரணமென்ன?

1. சகலரிடத்திலுமிருக்கின்ற இந்த 'நான்' எவ்விதமாக விளங்குகிறானென்றால், பிறந்தவனாயும் புஜிப்பவனாயும் நினைப்பவனாயும் செய்பவனாயும் தூங்குகிறவனாயுமிருப்பதாகிய இவை முதலான தருமத்தை (குணத்தை) யுடையவனாக இருக்கிறான். இவை சரியான ஸ்திதியா அல்லவாவெனில், சரியான ஸ்திதியல்ல. யாதெனில், இவைகளுக்குச் சாக்ஷியாயிருக்கிற நான் என்பதற்கு விலக்ஷணமாயிருக்கப்பட்ட பஞ்சகோசங்களுடைய தருமங்களாய் இவைகளிருக்கின்றனவல்லவா? இவைகளில் பிறந்தது புசிப்பதில்லை. புசிப்பது பிறப்பதில்லை. இவ்வாறே நினைப்பதும் தூங்குவதுமாகிய தருமங்களை யுடைய பஞ்ச கோசங்களானவை ஒரு கோசத்தை மற்றொரு கோசம் நானென்று விவகரிப்பது பரஸ்பரம் விரோதமாயிருக்கிறது. இதல்லாமல் வெல்லத்திற்குத் தித்திப்புச் சுபாவம்போல நானென்பவனுக்குப் பஞ்சகோசமே வடிவமானால், வெல்லத்தைக் கிஞ்சித்துக்

கிள்ளியெடுத்தால் சுபாவத் தித்திப்பு சந்தேகமில்லாதிருப்பதுபோலப் பஞ்சகோசங்களைப் பிறித்துப் பார்க்கும் விஷயத்தில், அவைகளில் நானென்பது கொஞ்சங்கூடக் காணப்படாமல் மயிர், தோல், நரம்பு, எலும்பு, மாமிசமென்றும், பிராணமயனென்றும், மனோமயனென்றும், விஞ்ஞான மயனென்றும், ஆநந்தமய னென்றும், அவைகள் வெவ்வேறு நாமரூபங்களாகவும், ஜடமாகவும் காணப்படுகிற படியால் இவைகளை நானென்பது பொருத்தமாயில்லை. மேலும், இவைகளை நானுனென்று அறியாமையால் விவகரித்ததினால் தான் ஆரம்பமுதல் இதுவரையும் ஜனனமரண துன்பங்கள் வந்திருப்பதாலும், இனிமேலும் இவைகளை நானென்றுவிவ்கரிப்பின் பின்னும் அநந்தவித ஜனன மரணத்துன்பங்கள் வருவதாக இருப்பதாலும், இவைகளை நானென்றுவிவகரிக்கிறவர்களியாவரும் ஸதா துன்பத்தையே யடைந்து வருந்துவதில் தடையில்லை. ஆதலால் தெளிவில்லாத விசாரத்தோடு கூடியிருக்கிற இந்த நான் சொந்த ஸ்திதியைவிட்டு நழுவியிருக்கிறுனென்றே நன்றாய் விளங்குகிறது.

2. மறுபடியுஞ் சொந்த ஸ்திதிக்குக் கொண்டுவரக் கூடுமா கூடாதா?

சொந்த ஸ்திதிக்குக் கொண்டுவரக்கூடும். அதற்குச் சுருதி யுக்தி யனுபவங்களால் தீர்மானிப்பவதாவது. "தன்னைத்தானென்றறியு மவ்வளவுந் தானே" யென்பது சுருதி. இராஜகுமாரன் தன்னை ராஜாவென்று அறிந்த மாத்திரத்தில், தனக்கு வந்திருந்த வேடத்தன்மை நீங்கியதே யுக்தி; சொற்பனத்தி லலைந்துழந்துகொண்டிருந்தவன், விழித்த மாத்திரத்தில் சுயஸ்திதியை யடைந்ததே அனுபவமாம்.

3. சுயஸ்திதிக்குக் கொண்டு வந்தாலும் அதிலிருந்து நழுவாமலிருக்கக் கூடுமோ கூடாதா?

பிரமத்தை யறிந்தவன், பிரமமேயாவானென்று கூறுவதால் நழுவமாட்டானென்பதே சுருதி. இராஜ குமாரன் மறுபடி வேடனுகவாகாததே யுக்தி. தான அறிவாயிருந்து யாவையு மறிந்துகொண்டு, அறியப்படுகிற பதார்த்தம் போல் தானழியாமலிருப்பதே யனுபவம்.

4. இந்த நானென்பவனை விசாரிப்பதினால் பிரயோசன மென்ன, விசாரியாததினால் கேடுதலென்ன?

தன்னை விசாரியாததினாலேயே ஜனன மரணம் வந்திருக்கிறதென்று கூறுவதும், தன்னை யறிந்தால் தான் பிறப்புத் தீருமென்கிறதே சுருதி. ஒரு மனுஷனுக்குக் கிருக்குப் பிடித்திருப்பதற்கு மேல அனர்த்தமுமில்லை, அது தெளிவதற்குமேல் இலாபமுமில்லை யென்பதே யுக்தி. ஞானி நித்தியதிருப்தனாயும், அஞ்ஞானி நித்திய துக்கியாயுமிருப்பதே யனுபவம்.

5. இந்த நான் சுயஸ்திதியை விட்டு நழுவுகிறதற்குக் காரணமென்ன?

அஞ்ஞானமே சுயஸ்திதியைவிட்டு நழுவுவதற்குக் காரணமென்று முன்னமே கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் நானென்கிறதற்குச் சரியான அர்த்தம், அனர்த்த ஜடதுக்க ரூபமாயிருக்கிற பஞ்ச கோசங்களல்ல, அவஸ்தாத்திரய சாக்ஷியாயும் காலதேசவஸ்துப் பரிச்சேதரஹிதராயுமிருக்கிற சச்சிதாநந்தப் பிரமமே நாமென்று சந்தேகமறத் தீர்மானிக்கத் தக்கதாயிருக்கிறது.

இவ்விதப் எந்தப் புருஷன் சதாவும், நாம் யாரென்று விசாரஞ் செய்கிறானோ, அவனுக்குத் துக்கமானது ஒருக்காலும் வராதென்பது சத்தியம். அஃது யெவைபோலெனில் தாமரையிலையில் ஜலம் ஒட்டாதது போலும், சந்திரனிடத்துச் சூடானது வராததுபோலும், வைராக்கிய புருஷனிடத்துப பாவமானது சம்பந்தப்படாதது போலும். நாம் யாரென்று விசாரித்து, நானாகிய தன்னைப் பிரமமென்றறிந்து, சகல பிரபஞ்சத்தையும் பொய்யென்று அனுசந்தானஞ் செய்கிற புருஷனுக்குத் துக்கமானது கிஞ்சித்து மணுகாதென்பது சித்தம். ஆதலால் சற்குருநாதன் முன்னிலையில் சத்சாஸ்திரவாயிலாக விசாரஞ் செய்து தெளிவுற்றுப் பிரமாநந்தப்பேற்றிற் குரிய ராமாறு நமது சத்குருநாதர்களை சதா சிந்தித்து நம்பி, சாந்தியை யடைவோமாகவும். ஓம் தத் ஸத். குற்றம் உலகம் பொறுக்க.

M. வேதநாயகசாமி எவ். டீ. எஸ்.

சிந்துபூந்துறை.

சில "கீழ் ஜாதியாரின்" கஷ்டங்கள்.

சென்ற எப்பிரல்மீ 22உ நமது பிரஹ்மச்ஞான சபையின் தலைவரான மாது ஸ்ரீ பெஸண்டு அம்மையவர்கள் கள்ளிக் கோட்டையில் நடந்த கேரள பிரஹ்மக்ஞானக் கூட்டத்திற்கு அக்கிராஸனராகச் சென்றிருந்தனர். அவ்வமையம் அங்கு அரிய சில பிரசங்கங்கள் நடைபெற்றன. பிரஹ்மஸ்ரீ வி. பி. ராமசுவாமி ஐயர் அக்கிராசனம் வகிக்க இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்ட ஜாதிகளின் சஷ்டங்களைப்பற்றி அம்மையவர்கள் அருமையான ஒரு உபந்யாசஞ் செய்தனர். அம்மையவர்கள் இச்சனங்கள் பக்ஷம் மிகப் பரிந்து பேசி, இவர்களைத் தாழ்ந்த நிலைமையில் வைத்திருப்பது அநியாயமெனவும் அது தேசத்திற்கு அவமானமெனவும், அபாயமெனவும் இவ்விதக் கொடுமையும் பாபமும் நம்மை வெகுநாளாய் வருத்தி வருகின்றனவெனவும், இதனை நாம் சீக்கிரம் ஒழித்து விடவேண்டுமெனவும் கூறினார். இஃது கேரள தேசத்திற்கு அவசியம் உபதேசிக்கப்படவேண்டிய உண்மையே.

ஏனெனில் அங்குள்ள ஜாதிக் கொடுமைகளிற் சிலவற்றைப்பற்றி உலகப் பிரசித்திபெற்ற ஸ்ரீ விவேகானந்த சுவாமியவர்களும் பன் முறையும் கண்டனஞ் செய்திருக்கின்றனர். ஆயினும் இத்தன்மையான கெடுதல்கள் இம் மாகாணத்தில் கேரளப் பிரதேசங்களிற்றான் இருக்கின்றனவென்று நினைக்கப்படாது. நாகரீகத்திற்குப் பிறப்பிடமென்று பலராலும் கருதப்பட்டுவரும் தஞ்சைமுதலிய ஜில்லாக்களிலும் இக் கொடுஞ்செயல்கள் இன்றும் காணப்படுகின்றன. தீண்டாச்சாதியாரெனத் தனியாய் சிலரிருக்கின்றனரென்று நினைப்பதே பெரும் பிழையாகும். பள்ளர், பறையர் முதலியோரை யவ்விதம் நடத்துவது எந்த ஜில்லாவிலும் சகஜமேயென்றும், ஆகையால் தவறன்றெனவும் "மேல்" ஜாதியாரான சிலர் நினைக்கலாம். இஃதும்

பிழையான அபிப்பிராயமே. ஏனெனில், அவர்களையும் முன்னேற்றம் அடையுமாறு செய்வது மேலானோர் கடமை யாகுமன்றோ? ஆயினும், பள்ளர் பறையர் இவர்களது இனத்தைச் சற்றேனும் சேராதவரும் நாகரீக முள்ளவரு மான ஜாதியாரிற் பலரையும் உயர்வகுப்பினர் இவ்வாறே சிலவிடங்களில் நிந்தனைக்குட்படுத்தி விலக்கியே வைத் திருக்கின்றனர். திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக் களின் சில கிராமங்களிலுள்ள சாணுர்கள் அல்லது நாடார் களை நடத்தும் விதமே யான் கூறுவதற்குப் போதிய சான் ருகும். பாளையப்பட்டு ஜமீன் கிராமமாகவிருப்பின் அதி லுள்ள விஷனங்கள் படும் அவஸ்தைகளுக்குக் கணக் கில்லை. இந்நாடார் ஜனங்கள் நாகரீகமற்றவர்களென்று நாம் கூறமுடியுமா? முடியாது. வணிகத் துறையில் மிகுந்த அனுபவமும் சாமர்த்தியமு முடையவர்கள். இவர்கள் நடையிலும் உடையிலும் சுத்தமாகவே இருக்கின்ருர்கள்.

கல்வியிலும், இவர்கள் மிகக் குறைந்தவர்களென நாம் எவ்வாற்ருனும் கூறவொண்ணுது. இவர்கள் ஜாதி ஒற்று மையும் ஜாதிக்கட்டுப்பாடும் ஜாதி அபிமானமும் மிகவுள்ள வர்கள். (பிராம்மணரல்லாத) ஏனைய ஜாதிகளுக்குள் நா டார்கள் பொருளிலும் மிகுந்தவர்கள். அவ்வாறிருப்பி னும், மேற்கூறியஜில்லாக்களின் சிலபாகங்களில் இவர்களைத் தீண்டாச் சாதியரெனமதித்து, (ஏனைய) "உயர்ந்த" ஜாதி ஜனங்கள் நடமாடும் தெருக்களில் அவர்களை வரப்படா தென்று தடைசெய்திருக்கும் வழக்கம் விந்தையினும் விந் தையே, கொடுமையினுங் கொடுமையே. இச்சாதியர்பால் ஏனைய ஜில்லாக்களிலுள்ள ஜனங்கள் இத்துணை அலக்ஷிய மும் கொடுமையுஞ் செய்வதில்லை. இதனையும் சில நேயர் கள் அறிவார்கள். தென் ஜில்லாககளில் நாடார் ஜனங்கள் எப்படி நடத்தப் படுகின்ருர்களோ அப்படியேதான் மேற் குக் கடற்கரையையடுத்த ஜில்லாக்களிலுள்ள தீயர்களும் அங்கு நடத்தப்படுகின்ருர்கள்; இவர்கள்படும் அவஸ்தைக்

கும் அவமானத்திற்கும் கணக்கில்லை. மாது ஸ்ரீ பெஸண்ட் அம்மையார் இதனையகற்றும்படி ஜனங்களுக்குப் பன்முறை வற்புறுத்தியிருக்கின்றார். கள்ளிக்கோட்டையில் ஜில்லா ராஜரீகமுறைச் சீர்திருத்தக் கான்பரன்சாரால் அம்மையாரவர்கள் அழைக்கப்பட்டு அங்கு அவர்களால் ஏற்பட்டிருந்த பின்வரும் தீர்மானத்தைப் படித்து, அதற்கு அநுசரணையாய் ஓர் சிறு உபந்யாசத்தைச் செய்தனர். அதன் சுருக்கம் பின்வருமாறு, "கேரள தேசத்திலுள்ள சிலஜாதி ஜனங்கள், பொதுஸ்தலங்களில் பிரவேசித்துப் புழங்கப்படாதென்று ஏற்பட்டிருக்கும் கட்டுப்பாடு அவர்களுக்கு மிகவும் துன்பத்தையும் அவமானத்தையும் தருகின்றமையால், இந்த கான்பரன்ஸ் அவ்வித வேற்பாடுகள் கொடுமையென்றும் அநீதியென்றும் அபிப்பிராயப்பட்டு இவை நீங்குமாறு ஜன சமூகத்திற்கும் இஜ்ஜில்லாவிலுள்ள மதசம்மந்தமான சங்கங்களுக்கும் மனுச்செய்துகொள்ளுகிறது."

"உங்கள் ஜனங்களில தீயர்கள் என்று சொல்லப்பட்ட ஜாதியார்கள் பொதுப் பாதைகளிற் செல்லக் கூடாதென்று இங்கு ஏற்பட்டிருக்கும் வழக்கம் நியாயமில்லையென்பதே மேற்படி தீர்மானத்தின் கருத்தாகும். இஃது (ராஜாங்க) சட்டத்தினால் ஏற்பட்ட தடையன்று. இது வெகுகாலமாய் ஏற்பட்டு வந்திருக்கும் பழக்கமே இஃது தீயவழக்கமே தவிர வேறில்லை. காரணமின்றிப் பிறர்க்கு சில ஜனங்கள் அளிக்கும் அழியா நிந்தையிதுவாகும். யாதொரு உண்மையும் இத்தகைய பழக்கத்திற்கு ஆதாரமில்லை யென்பது யாவர்க்கும் தெற்றெனவிளங்கக்கூடியதே. சில சமயங்களில் ஒரு மனிதன் நம்முடைய சமீபத்தில் வருவது அபாயகரமாயிருக்கலாம். உதாரணமாய், பிளேக், வசூரி முதலிய தொத்து வியாதிகள் ஒருவனிடமிருப்பின், அவனைத் தனியே ஒதுக்கிவைப்பது நியாயமாகும். ஆனால் ஓர் ஜாதியிற் பிறந்த மாத்திரத்திலேயே ஒருவன் பிறரை யசுத்தப்படுத்தி விடுவானென்று கூறுவது சரியாகாது. தீட்டு

உண்டுபண்ணக்கூடியது ஒரு மனிதனுடைய வாழ்க்கையே தவிர, அவனது பிறப்பன்று. ஒருவன் வீதிவழியாய்ப் போனமாத்திரத்தால் அவன் எவ்வாறு தெருவைத் தீண்டற்படுத்தி விடுகின்றான்? ஆனால் அவன் மதுபானமும் மாமிச பக்ஷணமுஞ்செய்து, தனது வாழ்க்கையிலும் அசுத்தமா யிருப்பானேயாயின், அவனது சரீரத்தினின்றெழும் சக்திகள் சுத்தமுள்ள ஜனங்களை யசுத்தப்படுத்திவிடுமென்று கூறுவது கொள்ளற்பாலதே.

"மாமிச பக்ஷணமும் மதுபானமுஞ் செய்யும் ஆங்கில தேசத்தவன் ஒருவன் உங்களது சுத்தமான தெருவழியே செல்வானாயின் நீங்கள் அவனைத் தடைசெய்ய மாட்டீர்கள், அவனைமாத்திரம் போகவிடுவீர்கள். ஆனால் தூய்மையான வாழ்க்கையும், மாமிசபக்ஷணம், மதுபானம் இவைபோன்ற தீமைகளில்லாத ஓர் 'தீய'ச்சேர்ந்த வகுப்பினை மனிதன் உங்கள் தெருவழியே செல்வதாயிருந்தால் அவனைச் செல்லவிட மாட்டீர்கள். ஏன்? அவன்ஜாதி தீயர்ஜாதியானதால்! பிராம்மணனொருவன் கட்குடித்தால அவன் தெருவில் போகப்படாதென்று நீங்கள் தடுப்பீர்களா? தீட்டு அல்லது அசுத்தம் என்ற விவகாரமே இங்குளழுவில்லையே. ஜாதியேதான் பெரிதாய் நிற்கின்றது! உங்களுடைய சம்பிரதாயத்தால் உங்களுடைய ஜனங்களையே நீங்கள் மானக்கேடாய் நடத்துகின்றீர்கள். இவ்வழக்கத்தைச் சனசமூகம் ஒழிக்க வேண்டும். உங்கள் மதச்சம்பிரதாயங்களை யனுசரிக்கும் விஷயத்தில் உங்களுடைய மதத்திற்குத் தகுந்த விதமாய் மரியாதைசெய்யுங்கள். இப்பொழுது செய்யும்வழி அதற்கு நீங்கள் கௌரவத்தைக் கொடுக்காது. பாதையில் தீயர் ஜாதியார் வரப்படாதென்ற கட்டுப்பாடு அவர்களுக்கு அவமானத்தைத்தராது. அவ்வாறு அவர்களைத்தடுத்து விலக்கி வைப்பவர்களுக்கே அவமானமாகும். அத்தனை கோணலான செய்கையை ஏற்றுக்கொள்ளும் அம்மதத்திற்கே அவ்வழக்கம் அவமானத்தையுண்டாக்கும். தீட்டு அல்லது

அசுத்தத்தை உண்டுபண்ணக் கூடியவிஷயங்கள் உலகில் சில இருக்கின்றன. அவை கொடுமைச் சித்தம், கோபம், இறுமாப்பு, வெறுப்பு என்பவைகளே. அசுத்தப்படுத்தும் விஷயங்கள் இவைகளேதவிர ஒருவன் உற்பத்தியான கரு அல்லது ஜாதிதான் என்று நாம் சொல்லமுடியாது. சுத்த வாழ்க்கையுள்ள நீங்கள் எல்லோரும், "உத்தம குடியிற்" பிறந்தநீங்கள் எல்லோரும், தீய ஜாதியர்பால் இத்தீச் செயலை செய்கிறீர்கள். அவர்கள்மீதுள்ள அவமானத்தை நீக்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். பிறரை நிந்தைக்குட்படுத்துவது மிகவும் கொடூரமான செய்கை. அதினும், ஓர் ஜாதிமனிதன் ஓரிடத்தில் வருவதனாலேயே அந்த விடத்தைத் தீண்டற்படுத்தி விடுகின்றானென்று சொல்வதினும் கொடிய நிந்தனையும் வேறுண்டோ?"

[மேற்படி தீர்மானம் சபையோர் யாவராலும் அங்கீகாரம் செய்யப்பட்டது.]

அம்மையாரவர்கள் மேற்கண்டபடி கூறியவற்றை நமது சபையின் அங்கத்தினர் எவரும் கவனிக்க வேண்டுவதவசியம். நமது தேசாபிமானிகள் பலரும் பெருங் கெடுதல்களென்று மதித்துக் கண்டனஞ் செய்துவரும வழக்கங்கள் பலவற்றையும், "சகோதரபாவமே" எமது முதற்கொள்கையெனச் சாற்றும் சகோதரர்கள் ஏன் நிவர்த்திக்கப் பிரயத்தனப் படுகின்றார்களில்லை? தீரமாய்த் தன்னை மறந்துழைக்குந் தன்மையே தற்காலத்தில் நமது சபையின் அங்கத்தினர் யாவரும் வேண்டற்பாலது. இது நம்மனோர்க்குப் புதிதான கருத்தன்று. நமது அம்மையாரவர்கள் கூறியவண்ணமே நீடித்த காலமாக நம்மீதுள்ள பழியை யகற்றிக்கொள்ள நாம் ஒவ்வொருவரும் முயல்வோமாக.

"சிறப்புஞ் சீலமு மன்றிப்
பிறப்பு நலந்தருமோ பேதையீரே"—கபிலர்

ஓம் தத்ஸத்

ஆர். பஞ்சாபகேச ஐயர்.

சுதேசக் கல்வி.

சென்ற 100 வருஷங்களாக நம் இந்தியாவில் ஆங்கில கலாசாலைகள் எங்கும் ஏற்பட்டு ஆங்கில வித்தையைப் பரப்பி வருகின்றன. முதலில் அந்நாளில் இந்தியாவை ஆண்ட ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் சுதேசிகளைத் தங்களிடம் வேலை பார்க்குந் திறமை வாய்ந்தவராகச் செய்து அவரது தொகையைப் பெருக்கும்பொருட்டே அக்கலாசாலைகளை ஏற்படுத்தினார்கள். இதுவே அவரது முக்கிய நோக்கம். சுதேசக்கல்விமான்கள் ஆங்கிலம் படித்துத் தேசபாஷையில் அவ்வாங்கில பாஷையிலுள்ள அரிய விஷயங்களையும் சாஸ்திர வாராய்ச்சிகளையும் எழுதி நாட்டார்க்குப் பயன்படுத்துவாரென்றும் அக்கம்பெனியார் கருதினர். அவரது முதல் கருத்து அவர் எதிர்பார்த்ததற்கு மேலாகவே நிறைவேறியது. ஜனங்களுக்கு முக்கியமானது இராஜசேவையே. அதுவே மிகவும் கௌரவமானது. நாட்டின் நன்மையைக் கருதி உழைப்போர்க்கு அதை விடச்சிறந்த வேலை கிடையாது. அதிகாரமுறையிலுள்ளவர்கள் ஜனங்களுக்கு நன்மைகள் செய்யவேண்டுமென்று நினைத்தால், எவ்வித நன்மையையும் செய்யலாமல்லவா? அரசருக்குச் சிறிதும் துரோகம் நினைக்காமலும் அவரது வருவாய் எள்ளளவு குறைவுபடாமலும் அவர்கள் காரியம் நடத்தலாம். குடிகளை வருத்திப் பொருள் பறித்துத்தாம் செல்வர்களாகி இன்புற்று வாழ நினைத்தாலும் அதற்கு இராஜசேவை இடங்கொடாமற் போகாது. இதையே நினைத்துத் தம் அதிகாரத்தால் பொருள் கவர்ந்து பின்னர் இடர்ப்பட்டோர் பலராவர். தெய்வம் நின்று கேட்கும். அரசன் அன்றே கேட்பானன்றோ? அரசனுக்குத் துரோகமும் குடிகளுக்குக் கண்ணீரும் விளைத்தோர் யார்தாம் இவ்வுலகில் நீடித்து வாழ்ந்து சுகப்பட்டனர்.

இனி, அவரது இரண்டாங் கருத்து எவ்வாறு நிறைவேறியதென்பதைப் பார்ப்போம். வடதேசத்தில் வங்காள

பாஷையும் மஹாராஷ்டிர பாஷையும் சமீபகாலத்தில் சிறப்புற்று மேன்மேலும் ஓங்கிவளர்ந்து வருகின்றன. அப்பாஷைகளைப் பேசுவோர் அவற்றை நன்கு மதித்துக்கற்று வருகின்றனர். தம்பாஷையையே சிறந்ததாகக் கருதி அவர் பேசும் பேச்சுக்களிலும், எழுதும் காகிதங்களிலும் அதையே முக்கியமாக எடுத்து ஆளுகின்றனர். பத்திரிகைகளும் புத்தகங்களும், நாளுக்கு நாள் பெருகுகின்றன. நூதன ஆராய்ச்சிகளும், எல்லா சாஸ்திரக் கொள்கைகளும், அப்பாஷைகளில் ஏறிவிட்டன. அவைகளையே ஜனங்கள் பெரும்பான்மையாகப் பாராட்டுகின்றனர். ரவீந்திரநாத டகோர் என்று பெயரிய வங்காள கவிசிரேஷ்டருக்கு ஐரோப்பியரால் நோபல் பரிசு என்பது கொடுக்கப்பட்டதென்றால், அப்பாஷை யடைந்திருக்கும் பெருமையை என்னென்று புகல்வது? ஆங்கில பாஷயில் தேரிய வித்வான்கள் ஐந்து பலர் இருப்பினும் பாமர ஜனங்களிடம் அவ்வாங்கில பாஷை அத்துணை பரவில்லை. ஆங்கிலம் படித்தோரும் விசேஷமாக சர்க்கார் வேலையை நாடுகிறதில்லை. இது பம்பாய் மாகாணத்தில் பெரு வழக்காகவுள்ளது. தாங்களே தனியே வியாபாரம் நடத்தவும் வேறு கைத்தொழில்களைக் கையாளவும் அவர் முயற்சிக்கின்றனர். தென்னுடோ இதற்குமுற்றிலும் விரோதமாகவுள்ளது. தென்னாட்டிலுள்ள பழைய கைத்தொழில்கள் நாளடைவில் பலகாரணங்களால் இறந்துவிட்டன. ஆங்கிலேய நாகரீகக் கலப்பால் குடிகளிடமிருந்த பூர்வமுறைகள் தலைதடுமாறி நிலை குலைந்துபோயின. பிழைப்புக்கு ஆகாரந் தேடுவது பலர்க்கும் ஆவசியகமாயிற்று. ஜனப்பெருக்கத்தாலும் வேலைத்துறைகளின் சுருக்கத்தாலும் போட்டியும் பொறாமையும் சர்க்கார் வேலைகளில் ஓர் அவாவும் ஏற்பட்டுவிட்டன. அதிகமாகப் படித்தவர்க்கே முதலில் சிறிய உத்தியோகங்களும் பின்னர் பெரிய பதவிகளும் கொடுப்பது சாதாரணமாய்விட்டதால், சர்க்கார் வேலையை விரும்பும் ஒவ்வொருவனும் ஆங்கிலங்கற்றுக் கொள்ளுவதோடு அதில் பெரிய பட்டங்களும் பெறவேண்டியிருக்கிறது. அவையின்றேல் அவனுக்கு அவ்வேலைகள் கிடையாவென்

பது திண்ணம். இதனால் தென்னிந்தியாவில் முக்கியமாக ஆங்கிலம் படிப்பதெல்லாம் சர்க்கார் வேலை பெற்று வயிறு பிழைப்பதற்கே என்று ஏற்பட்டுவிட்டது. ஆங்கிலம் படியாதவனுக்குப் பிழைப்பதற்கு வழியே யில்லை என்னலாம். அவனுக்குச்சிறிய பதவிகளுங்கிடையா. மேற்கூறிய காரணங்களால் தென்னிந்தாவில், அதிலும் முக்கியமாக நம் தமிழ் நாடுகளில், ஆங்கிலம் அதிகமாக விருத்திபடைந்துள்ளது. அப்பாஷை நமது வீடுகளிலும் நுழைந்து சிறுகச் சிறுக இடம் பெறுகின்றது. இதைப்போல வேறொரு மாகாணத்திலும் ஆங்கிலம் அத்துணை பரவவில்லை.

ஆயினும் தேசபாஷைகள் ஆங்கிலத்தில் தாக்குதலால் விருத்தி யடைந்துள்ளன வென்று சொல்லுதற் கிடமில்லை ஆங்கிலம் படிப்போர் முக்கியமாக ஏழைகளே. அவர்களே எவ்விதத்திலேனும் கஷ்டப்பட்டுப் படித்து சர்க்கார் உத்தியோகத்தில் அமர்ந்து மேன்மேலும் அவரால் அபிமானிக்கப்பட்டுப் பொருள் தேடி வாழ்கின்றனர். சென்ற 80 வருஷங்களுக்குள்ளாக சர்க்காரிடம் உயர்ந்த உத்தியோகம் வகித்தவருள் பெரும்பான்மையோர் ஏழைகளே. நடுத்தரத்தோர் சிறு பான்மையோராவர். இப்போது அவரது குடும்பத்தாரே தனவந்தராகி சர்க்காரது நன்மதிப்புக்களாகின்றனர். இவரைப் போலவே எல்லாரும் வரவேண்டுமென்ற வாசைகொண்டு தற்காலம ஜனங்கள் தங்கள் ஜீவனோபாயத்திற்குச் சாதனமாகவுள்ள நிலங்களையும் வீடுகளையும் அடமானம் வைத்தும் விற்றும் தம்பிள்ளைகளை ஆங்கிலக் கலாசாலைகளிற் பயிற்றுகிறார்கள். அப்பிள்ளைகள் தம் படிப்பு முடிந்து பெரிய பட்டங்களைப் பெற்றவுடன் போட்ட பொருளை மீட்டுவதற்காகப் பொருள் தேடிப் பிழைப்பதிலேயே தம் காலத்தைக் கழிக்கின்றனர். இதனால் தேசபாஷைகளில் தாம் படித்தவைகளின் சாரத்தை எழுதிப்பிறர்க்குப் பயன்படவும் தம் பாஷையை விருத்தி செய்யவும் படித்தோர்க்கு அவகாசம் இதுகாறும் ஏற்படவேயில்லை.

ஆயினும் சென்ற 10 வருஷகாலமாக இந்தியா முழுமையும் ஒரு கிளர்ச்சியுண்டாகியிருக்கின்றது. எல்லாத்

துறைகளிலும் இந்தியா மேன்மைபெற வேண்டுமென்று தேசாபிமானிகள் பாடுபடுகின்றனர். நாட்டின் மேன்மைக் குக் காரணம் குடிகளன்றோ? குடிகள் சரியான கல்வியைக் கல்லாவிடின் நாடு கீழ்மையுறுமன்றோ? ஆதலின் கல்வியபி விர்த்தி விஷயத்தில் அவரது மனது ஒருங்கே சென்றுள் ளது. கல்வியறிவே மற்றெல்லா அறிவுகளுக்கும் அடிப் படையாதலின் இந்தியர் ஒவ்வொருவரும் கல்விகற்க வேண் டுமென ஓர் தீர்மானத்திற்கு அவர் வந்துள்ளார். அவ்விதக் கல்வியை அவர் பயிலவேண்டுமென்பதில் ஐயப்பாடு நிகழ்ந் ததால் உள்நாட்டுப் பெரியோரும் தேசாபிமானிகளும் பா ஷாபிமானிகளுமான பலர்கூடித் தர்க்கித்து தற்கால ஆங் கிலப் படிப்பில் பெருங்குறைகள் உள்ளனவென்றும், அப் படிப்பின் நோக்கத்திற்கும் நமது நோக்கத்திற்கும் பெரிதும் மாறுபாடுள்ளதால் அதை முற்றிலும் மாற்றி நமது தேச மேன்மைக்கும் நோக்கத்திற்கும் தகுந்தவாறு பல சீர்திருத் தங்களை ஏற்படுத்த வேண்டுமென்றும், முடித்திருக்கின்றார் கள். அவரது எண்ணங்கள் நிறைவேறுவது சுலபமான தன்று. ஆற்றுவெள்ளத்தை அணையிட்டுத் தடுப்பதுபோல அவ்வளவு கடினமாக விருப்பதுபோலத் தோன்றுகிறது. இதிற் செய்யவேண்டியவை யாவும் ஜனங்களே செய்ய வேண்டி யிருக்கிறது. பொருளிடங்காலம் கருவிகள் வாய்த் தாலன்றி அவை முற்றுப்பெறா. அவை முற்றுப்பெறுங் கா காலம் நெருங்கிவிட்டது. ஆதலின் சுதேசக்கல்வியைப் பரப்பும் சமயம் இதுவே. அக்கல்வியீதெனவும், அதன் மேன்மைகள் இவையெனவும், அக்கல்வியை எவ்விதம் நாட் டுவதென்பதும் இனி எழுதப்படும்.

ஆர். ரெங்காச்சாரி,
மதனப்பள்ளி.

ஒரு கதை.

(154-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தாத்தா:—அரசன் வயதில் சிறியவன். உல்லாசமாய் தன் மனைவிமாருடன் சுகமாய்க் காலம் கழிப்பதில் பிரியப் பட்டவன். அந்த அழகிய தடாகத்தில், ராஜா தன் மனைவி மாருடன் ஜலக்கிரீடை செய்துவிட்டு அப்பால் யாவரும் பட்டாடை யுடுத்தி, சர்வாலங்கிருதராகப் புஷ்ப மாலைக ளைத் தலையிலும் மார்பிலும் அணிந்து, அப்பால் யாவரும் அமிர்தம் போன்ற மிருஷ்டான்னம் சாப்பிட்டார்கள். அப் பால் நந்தவனத்தில் குளிர்ச்சியான லதாகிருஹத்தில் ஹம் ஸதூலிகா மஞ்சத்தைப் போடும்படி செய்து அதன் மீது அரசன் சயனித்தார். வீசிய தென்றலாலும் பத்தினிமார் செய்த பணிவிடையாலும் அரசன் அயர்ந்து நித்திரை செய்யலானார்.

சாதாரணமாக பத்தினிமாரில் அநேகர் அரசன் பக் கத்திலேயே உட்கார்ந்து கொண்டு, சாமரம் போட்டுக் கொண்டும் விசிறியால் வீசிக்கொண்டும், விழித்துக்கொண்ட உடன் வேண்டிய உபசாரம் செய்யத் தயாராகவும் இருப் பது வழக்கம். ஆனால் அன்றையதினம் அரசன் அயர்ந்து நித்திரை செய்ததாலும், அரசனிடம் பணிவிடை செய்து கொண்டிருந்த மனைவிமாரைத் தவிர மற்ற மனைவிகள் விநோதமாகக் காலம் கழிப்பதற்காகக் குளத்தின் கரையி லும் நந்தவனத்திலுள்ள செடிகளுடேயும், உலாவி வருவ தைப் பார்த்ததாலும், அரசன் பக்கத்திலிருந்த பத்தினிக ளும், குதூகல மேலீட்டால், கூடச் சென்றுலாவினார்கள்.

வெங்கடராமன்:—எல்லோரும் எங்கே போனார்கள் தாத் தா. என்ன செய்துகொண்டிருந்தார்கள்?

தாத்தா:—தடாகத்தைச் சுற்றி நந்தவன மிருந்தல்ல வா? அதில் அரசன் மனைவிகளனைவரும் ஜதை ஜதை

யாய்த் திரிந்துகொண்டு, செடிகளிலுள்ள புஷ்பங்களைப் பறித்து, அவைகளைத் தலையில் சூடிக்கொண்டும், ஒருவர் மற்றவரைக் காதில் அணிந்துகொள்ளும்படி செய்து கொண்டும், ஒருவர் மேல் ஒருவர் வாரி யிறைத்துக்கொண்டும், விளையாடிக்கொண்டும் போனார்கள். கீழே சிதரிக் கிடந்த புஷ்பங்களால் அவர்கள் எந்த மார்க்கமாய்ச் சென்றார்கள் என்று வெளியாகும்படி யிருந்தது.

ஜானகி.—செடியிலிருக்கிற புஷ்பங்களையும் தழைகளையும் வீணாக பறிக்கக் கூடாது, செடிகளுக்கு வருத்தமா யிருக்கும் என்று சொன்னீர்களே தாத்தா. இந்த ராஜஸ்திரீகள் மட்டும் செடிகளிலிருந்த புஷ்பங்களை யெல்லாம் பறித்து சிதரினார்கள் என்று சொல்லுகிறீர்களே. அது சரியா தாத்தா?

தாத்தா:—நீ கேட்டது நல்ல கேள்வி, ஜானகி. செடிகளுக்கும் உயிருண்டு. அன்பாய்த் தண்ணீர் பாய்ச்சி வளர்த்து வந்தால் செடிகள் சந்தோஷமாக யிருக்கும். இந்த நந்தவனத்திலிருந்த செடிக ளிதுவரை மிகவும் அன்பாக பாதுகாக்கப்பட்டு வந்தன. க்ஷாந்திவாதி தினந்தோறும் செடிகளுக்குத் தண்ணீர் பாயும்படி செய்து அவைகளுக்கு யாதொரு தீங்கும் நேரிடாதபடி கவனமாய் பார்த்து வந்தார். அவருக்குச் சமானமான பெரியவர்கள் வந்தால் அவர்களுக்கு அர்க்கியம் கொடுப்பதற்காகவும், அவர் ஜபதபம் செய்யு மிடத்தை பரிசுத்த மாக்குவதற்காகவும், தேவதார்ச்சனை செய்யவும் வேண்டுமளவு புஷ்பங்களைக் கொய்து வருவாரே யொழிய அனாவசியமாய் செடிகளிலிருந்து ஒரு இலையாவது பூவாவது எடுக்கமாட்டார். அப்படி அவசியமான புஷ்பங்களைக் கொய்யும்போது கூட செடிகளின் அனுமதியைப் பிரார்த்தித்த பிறகே அப்படிச் செய்வார். ஆனால் இவர்கள் ராஜஸ்திரீகள் அல்லவா? அவர்களைத் தட்டிச் சொல்ல யாராலாகும்? அவர்கள் விளையாட்டுத் தனமாகச் செய்த தீங்கு வன தேவதைகளுக்கு வருத்த

யாய்த் தானிருக்கும். இருந்தாலும், அதைப் பற்றி யோசிக்காமலே விளையாட்டாய் இருந்துவிட்டார்கள். உலகத்தில் எவ்வளவு பேர் தாங்கள் செய்யும் காரியங்களின் கெடுதிகளைப் பற்றி எண்ணுமல் செய்து தீங்கிழைக்கிருர்கள். அது போகட்டும், அந்தச் சிறு பெண்கள் ஆனந்தமாய்ச் சிரித்துக்கொண்டும், ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் ஒருவரையொருவர் கேலி பண்ணிக்கொண்டும் தடாகத்தின் தென்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே ஆசிரமத்தின் அருகில் ஒரு மரத்தினடியில் பத்மாசனத்தில் அமர்ந்து ஒரு பெரியவர் நிஷ்டையில் இருந்தார். அவரைப் பார்த்தால் பரமசாந்தமாயும் அழகாயும், சர்வ பூத ஹிதராயும் தோன்றிற்று. அவரது அகண்ட மார்பும், அதை நிறப்பி மறைத்த வெள்ளை வெளேர் என்று வெளுத்த தாடியும், நாசிநுனியை நோக்கிய பார்வையும், ராஜ ஸ்திரீகளின் மனதைக் கவர்ந்தன. அவர்கள் எல்லோரும் திடீரெனச் சிரிப்பு, ஆடல், பாடல்களை நிறுத்தினர்கள். பெரியமஹானுடைய முன்னிலையிலிருப்பதாக உணர்ந்தார்கள். தாங்கள் இதுவரை செய்தது அபராதம் என்று உன்னினர்கள். இந்த யோகியின் மன்னிப்பைக் கேட்டு ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமென்று அவர்களுக்குத் தோன்றிற்று. எல்லோரும் நிச்சப்தமாக யோகியின் முன்னுல், தள்ளி அரைவட்டமாய் உட்கார்ந்து பய பக்தியாய் யோகியின் நிஷ்டை கலைவதை எதிர் பார்த்திருந்தார்கள்.

ஜா:—தாத்தா, நூற்றெட்டு ராஜ ஸ்திரீகள் உல்லாசமாய் சிரித்துக்கொண்டும், பாடிக்கொண்டும் வந்த சப்தத்தால் யோகி ஏன் விழித்துக்கொள்ளவில்லை தாத்தா? எங்கப்பா ஜபம் பண்ணுகிறபோது வெகு தூரத்தில் யாராவது பேசினுல் கூட ஜபம் ஓடவில்லையென்று கோபிக்கிருரே! மேலும் இவர் தான் தபசியாச்சுதே வேண்டுமானுல் எல்லாரையும் விழித்துப் பார்த்தால் அவர்கள் சாம்பலாக்க முடியாதா, தாத்தா?

கோமதி:—ஏதடீ, இது, ஆசிரமமாச்சே என்று பயமில்லாமல், இந்த ஸ்திரீகள் சப்தம் போட்டதனுல் அவர்களை

உடனே அந்த ரிஷி பஸ்மமாக்கினால் தான் புத்தி வரும், இல்லையா தாத்தா?

மீனு:—உங்க ளப்பாவைப்போல் என்று நினைத்தாயா, அந்த ரிஷியை, ஜானகி! பெரியவர்களைப் பற்றி அப்படி நினைக்கலாமா? அவருக்குக் கோபம் வந்தால் நம்மைப்போல் ஒருவராய் விடமாட்டாரா? அப்போது அவருக்குப் பெருமை யென்ன? மேலும், இவர் தானே க்ஷாந்தி வாதி தாத்தா?

தாத்தா:—ஆம்.

மீ:—அவருக்குத் தான் கோபமே கிடையாது என்று முன்னமேயே தாத்தா சொல்லவில்லையா? மேலே சொல்லுங்கள் தாத்தா.

தாத்தா:—சிறிது நேரம் கழிந்தபிறகு, நிஷ்டை கலைந்து கண்ணைத் திறந்து பார்த்தார். ஒரு நிமிஷத்தில் இன்னார் இவர்கள் என்று தெரிந்துகொண்டார். அவர்கள் எல்லாரும் நமஸ்கரித்தார்கள். க்ஷாந்திவாதியும் புன்னகை செய்து ஆசீர்வதித்தனர். அப்பால் இந்தச் சம்பாஷணை நடந்தது.

ஸ்திரீகள்:—பிரபோ! மஹரிஷே! எங்களை மன்னிக்க வேண்டும். தெரியாத் தனமாய் நாங்கள் இந்த ஆசிரமத் தருகில் விளையாட்டுத் தனமாய் சப்தம் போட்டுக்கொண்டு வந்தோம். க்ஷமிக்கவேண்டும்! எங்களை காப்பாற்றவேண்டும். எங்களுக்கு நல்ல புத்திமதியைச் சொல்லவேண்டும், பிரபோ!

க்ஷாந்திவாதி:—குழந்தைகளே. நீங்கள் பயப்படாதீர்கள். நீங்கள் தெரியாத் தனமாய்ச் செய்தீர்களே பொழிய வேண்டுமென்றல்ல. அதனால் என்னிஷ்டை கலையவுமில்லை. எனக்கு உங்கள் பேரில் யாதொரு கோபமும் இல்லை. உங்களுக்கு நல்ல புத்தி மதியைச் சொல்லவேண்டுமென்று சொன்னீர்களே! கேளுங்கள். எத்தனையோ ஜன்மங்கள் எடுத்துப் பிறகு மானிட ஜன்மம் ஏற்படுகிறது. அப்படி மானிடராய்ப் பிறந்து எவ்வளவு சுகிர்தங்களோ செய்து உங்களைப்போல் அழகிய திடமான சரீரங்களும் நல்ல பதவியும் கிடைக்கிறது. அப்படி யிருக்க நீங்கள் செ

ய்யவேண்டிய கடமை யென்ன தெரியுமா? தினந்தோறும் எப்போதும் நல்ல பரோபகாரமான காரியங்களைச் செய்து கொண்டேயிருக்கவேண்டும். இல்லாவிடில் உண்மையான சுகம் ஏற்படாது. நன்மையையும் தர்மத்தையும் செய்கிற வர்களை ஆனந்தம் வந்தடையும் என்பதில் சந்தேகமேயில்லை. புஷ்பங்களும், நல்ல ஆடைகளும், நவரத்னகசிதமான ஆபரணங்களும் ஒரு ஸ்திரீக்கு அழகல்ல ஆனால் நற்குணங்கள் தான் ஆபரணங்கள். நல்ல கர்மம் செய்தால் நல்ல பலன் கிடைக்கும். ஆரோக்கியமும் ஆனந்தமும் சத்கர்மங்களுடைய பலன்கள். எல்லாரும் விஷயங்களிலுள்ள துராசைகளை நீக்கி, பொறுமையைத் தேடவேண்டும். பொறுத்தார் பூமியாள்வார். அரசனாயிருப்பவனுக்குத்தான் அவசியம் பொறுமை வேணும். அரசனைப்போல் நல்ல உயர்ந்த பதவியிலிருப்பவர்களுக்கும் பொறுமை தான் அழகு.

தாத்தா—இவ்விதமாக க்ஷாந்திவாதி உபதேசம் செய்துகொண்டிருக்கிறார். அவர் வாக்கிலிருந்து பெருகும் அமிர்ததாரையை அந்த ஸ்திரீரத்தினங்கள் தங்கள் காதுகளால் பருகி இன்னும் கேட்கவேண்டுமென்ற ஆவலுடன் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். இதற்குள் தூங்கிக் கொண்டிருந்த அரசன் விழித்துக்கொண்டான். அருகில் ஒருவரையும் காணோம். முதன் முதல் விளையாட்டுக்காக ஒளிந்துகொண்டு இருக்கிறார்களோ தன் மனைவிமார்கள் என்று அங்குமிங்கும் பார்த்தான். ஒருவேளை அந்த மரத்துக்குப் பின் இருப்பார்களோ, அல்லது இந்த லதாகிருஹத்தில் இருப்பார்களோ என்று பார்த்தான். ஒருவரையும் காணோம். அப்புறம் அந்த பத்தினிமார் பேரைச் சொல்லி ,"கமலாஸனி" "நளினாக்ஷி" "மிருதுபாஷிணி","ப்ரியம்வதே" "கஞ்சமுகி" என்று கூப்பிட்டான். பதிலைக் காணோம். பிறகு அரசன் யோசிக்கலானான். "இது என்ன ஆச்சரியமாயிருக்கிறது! எங்கே போனார்கள்? அரசனாகிய என்னையே இப்படி அலக்ஷியம் செய்துவிட்டலலவா எங்கேயோ போய்விட்டார்கள். நான் இதுவரை பிரியமாயிருந்ததல்லவா பிசகாய்ப் போய்விட்டது! நல்லது நான் கோபித்தால் இவர்க

ளால் தாங்கமுடியுமா? ஒரு நிமிஷத்தில் அவர்களைத் தொலைத்துவிடுகிறேன். என்னை அலக்ஷியம் செய்யலாச்சுதா? என்னுடைய சுகத்துக்காக 108 ஸ்திரீகளை மணந்தும் எனக்குச்சமீபத்தில் ஒருவரும் இல்லை. என்ன அக்கிரமம்! என்று சொல்லிக்கொண்டே கொஞ்சதூரம் போய் பார்த்தான். புஷ்பங்கள் சிதரிக்கிடந்த இடத்தைப் பார்த்தான். "ஒரு வேளை அவர்கள் இங்கே வந்திருக்கவேண்டும், பூ சிதரிக்கிடக்கும் வழியேதான் சென்றிருக்கவேண்டு"மென்று சொல்லிக்கொண்டே போய் ஆசிரமத்தண்டை போனான். அங்கே என்ன காக்ஷியைக் கண்டான்? கண்டவுடன் அவன் மனம் என்ன விகாரமான மாறுதலடைந்தது! அரசன் திடுக்கிட்டான்.

(தொடரும்)

சோமசன்மா.

புத்தக வரவு.

ராஜாங்கங்களுக்குள் சமாதானம்:—ஆங்கிலத்தில் பிரசுரமாகும் இத்தொடரின் 114-வது சஞ்சிகையானது வெளிவந்துள்ளது. ஐரோப்பாவில் நிகழ்ந்த யுத்தத்தைச் சமாதானமாக முடிக்கவேண்டும் என்று முயன்றுகொண்டிருந்த ஐக்கிய நாடுகளின் பிரசிடெண்டான வில்சன் அவர்கள் கடைசியில் தாமும் யுத்தத்தில் ஜர்மனிக்கு எதிராகச் சேர நேரிட்டது ஆச்சரியகரமானது. பிரகிருத சஞ்சிகையில் 917-ஆம் வருஷம் எப்பிரல்மீ 2-ஆம் தேதி ஐக்கிய நாடுகளின் பிரசிடெண்டவர்கள், காங்கிரஸ்ஸில் உள்ள ஜனப் பிரதிநிதிகளுக்குச் செய்த பிரசங்கமானது வெளிவந்துள்ளது. ஜர்மனிய கவர்ண்மெண்டார் ஒருவரையறை அன்றியில் யுத்தத்தில் சம்மந்தப்பட்ட தேசத்துக் கப்பலாயிருந்தாலும் சரி, சம்மந்தப்படாத தேசக் கப்பலாயிருந்தாலும் சரி, ஆஸ்பத்திரிக் கப்பலாயிருந்தாலும் சரி, வியாபாரக் கப்பலாயிருந்தாலும் சரி, ஜனங்களைக் கொண்டுபோகும் கப்பலாயிருந்தாலும் சரி, எல்லாவற்றையும் கடலில் முழுக்குவதாகத் தீர்மானித்து அப்படியே அமெரிக்கன் கப்பல்களைக் கடலுக்கு இரையாக்கியதும், அதைப்பற்றி ஆக்ஷேபித்தும் பயன்படாமல் போனதும் ஜர்மனி ராஜாங்கத்தார் ஐக்கிய நாடுகளின்பேரில் யுத்தம் தொடங்கிவிட்டதாக எற்பட்டது. ஆகையால் இவர்களும் யுத்தம் நடத்தவேண்டியிருக்கிறது என்று தீர்மானம் செய்யப்பட்டது. ஜர்மானிய ஜனங்களோடு யாதொரு மூரணும் எற்படவில்லை யென்றும் ஆனால் அக்கிரமமாக யுத்தத்தை

நடத்துகிற அந்த இராஜாங்கத்தாரோடு மட்டும் அமெரிக்க ராஜாங்கத்தாருக்குச் சண்டை யென்றும், யுத்தத்தின் முடிவில் நீடித்த சமாதானம் ஏற்படுத்துவதே தம் கருத்தென்றும், பிரசிடெண்டு வில்சன் அழகாய்த் தம் கருத்தை வெளியிட்டுள்ளார். ஐக்கிய நாடுகளும் சண்டையில் சேர்ந்தால் நம்முடைய திறத்தார்க்கு பேருதவி யேற்படும் என்பதுடன் முடிவில் ஏற்படும் சமாதானமானது உலகத்துக்கே க்ஷேமகரமாயும் திருப்திகரமாயு மிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சமாசாரம்.

நான்காவது திருவாங்கூர் பிரஹ்மஞான மாகாணக் கான்பரன்சு சென்ற ஜூலைமீ 17, 18 தேதிகளில் திருவெட்டாற்றில் கூடிற்று. அவ்வமயம் மகா-ா-ா-ஸ்ரீ எஸ். கல்யாணராம ஐயர் அவர்கள் அக்கிராசனம் வஹித்தார்கள். அச்சமயமே திருவாங்கூர் முதல் நக்ஷத்திரக் கான்பரன்சும் நடைபெற்றது. அதைப்பற்றி சென்ற மாதத்தில் விவரித்தோம். 16ஆம் தேதி மாலையில் இரண்டு கான்பரன்சுகளில் அக்கிராஸனம் வஹிப்போர்களும் வந்து சேர்ந்தார்கள். வருணபகவானும் வருஷித்தான். இந்த வருஷம் மழையின்மையால் திருவாங்கூர் ராஜ்யமே வருந்திவந்தது. ஆகையால் இம்மழையால் யாவர்மனமும் குளிர்ந்தது. நாடும் செழிக்க ஏதுவாயிற்று. இதுவே சுபசூசகம் என்று எல்லோரும் அகமகிழ்ந்தனர். மனிதவர்க்கத்திற்குக் கண்ணுக்குப் புலப்படாமலே உழைத்துவரும் தோற்றாத் துணைவர்களின் ஆசீர்வாதமோ இது, என்று யாவரும் வியப்பு அடைந்தார்கள்.

மறுநாட் காலை 7 மணிக்கு ஈ. எஸ். கூட்டத்துடன் கான்பரன்ஸ் துவங்கிற்று. அப்பால் அக்கிராசனரும் வந்திருந்த பிரதிநிதிகளும் மேளவாத்தியத்துடனும் பஜனையுடனும் அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஊர்கோலமானது ஆதிகேசவஸ்வாமி கோவிலைச் சுற்றிக் கூட்டம் கூடவேண்டியதற்காக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த பெண் பாடசாலைக்கு வந்துசேர்ந்தது. அந்தப் பள்ளிக்கூடமும் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. எங்குபார்த்தாலும் புஷ்பங்கள்! எங்குபார்த்தாலும் நக்ஷத்திரங்கள்! அலங்காரம் செய்தது நக்ஷத்திர சபை அங்கத்தினர்கள்.

அக்கிராஸனரவர்கள் துவக்கத்தில் 'பக்தி' யென்னும் விஷயத்தைப் பற்றித் தமிழில் அரியதோர் உபந்யாசம் செய்தார்கள். அப்

புறம் சகோ. எ. எம். குமார பிள்ளையவர்கள் மலையாளத்தில் 'ராமாயணத்திலிருந்து சில படிப்பினைகள்' எனும் விஷயத்தைப் பற்றி உபர்யவித்தார்கள். அப்பால் 'துருவ' சரித்திரத்தை சிறு நாடக ரூபமாக பெண் பள்ளிக்கூடத்துச் சிறுமிகள் நடித்துக் காட்டினார்கள். அத்துடன் காலைக்கூட்டம் முற்றுப்பெற்றது. மத்தியானம் 1 மணிக்கு பிரதிநிதிகள் காரிய நிர்வாகத்துக்காகக் கூடினர். ஒவ்வொரு கிராமத்திலும் நக்ஷத்திரம் இந்திய ஸ்திரீகளின் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இரண்டு மணி முதல் மூன்று மணிவரை கேட்ட பிரசினங்களுக்கு அக்கிராஸனர் உத்தரமளித்தார்.

மாலை 6-30க்கு சகோ. ஸ்ரீநிவாசன் அவர்கள் வெள்ளியம்பலத்தைப்பற்றி பிரஹ்மக்ஞான சபை அங்கத்தினர்க்கு உபந்யாசம் செய்தார். உலகத்தில் நடைபெறும் சம்பவங்கள் எல்லாம் தற்செயலாய் நிகழ்வனவல்லவென்றும் ஆனால் ஈசுவரனால் சங்கற்பிக்கப்பட்ட நியதிப்படி அவருடைய சேவகர்களான மஹரிஷிகளால் நடத்தப்படுகின்றனவென்றும் வியக்தமாய் ரூபித்தார். 18ஆம் தேதி காலையில் சகோ கே. கிருஷ்ணசாமி ஐயர் ஸத்யவாதி அரிச்சந்திரன் சரித்திரத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய கூடமான தத்துவங்களைப் பற்றி உபர்யசித்தார். வஸிஷ்டர் அனுஷ்டிக்கும் முறை யெது—விசுவாமித்திரர் அனுஷ்டிக்கும் வழியெது என்று காட்டி அவைகளுடைய வித்யாசத்தைக் காட்டினார். அப்பால் சகோ. எஸ். வி. ஐயரும் ஆர். பத்மனாப ஐயரும் முறையே 'பிரஹ்மக்ஞான சகோதரர்கள்' 'மற்றவர்களை நோக்கி நாம் எப்படி ஒழுகவேண்டும்' என்ற விஷயங்களைப்பற்றி பேசினார்கள். முடிவில் அக்கிராஸனர் அவர்கள் நாம் எல்லோரும் சகோதரபாவத்தை நடத்தையில் கைக்கொண்டு ஒழுகவேண்டுமென்றும், அங்ஙனம் செய்யின் ஈசுவரனுடைய பொற்பாத கமலங்களை அடையலாம் என்றும் காட்டினார்கள்.

இரவில் 8 மணிக்கு 12 பேர்வரை பிரஹ்மக்ஞான சபையில் அங்கத்தினராய்ச் சேர்ந்தார்கள். அவர்களில் சிலர் அந்த ஊரில் முக்கியஸ்தர்கள்.

இந்த கான்பரன்சில் நடைபெற்ற யாவற்று விஷயங்களும் அமைதியாயும், அன்புடனும் கூடியவையாய் இருந்தன. யாவரும் இக்கூட்டத்திற்கு வந்து விசேஷ லாபத்தைப் பெற்றோம் என்ற அபிப்பிராயத்துடன் திரும்பி சென்றார்கள்.

புதிதாய்க் கண்டுபிடித்த ரோமசங்காரிணி என்னும்

தர்பார் சோப்.

இது தேகத்தின் எந்தப் பாகத்திலும் இருக்கும் ரோமத்தில் பூசுவதினால் தேகத்தின் சர்பத்திற்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினால் விடமாட்டீர்கள். தேகத்தின் காந்தியும் முன்போலவே நிற்கும். சுபாவமான நிறத்தைக் காப்பாற்றும்படியான சோப் இது ஒன்றைத் தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை.

வர்த்தகர்களுக்குச் சகாயமாய்க் கொடுக்கப்படும்.
ஏஜெண்டுகள் தேவை.

3 கேக் உள்ள பெட்டி 1-க்கு 0—14—0
ஓரே தடவையில் 2 பெட்டிக்கு 1—10—0
தபால் செலவு பிரத்தியேகம்.

**தலைமயிர் நரைத்து கிழவர்களைப்போல்
ஏன் காணப்படுகிறீர்கள்!**

எங்கள் தர்பார் கேச கலாப்பை

ஒரு தடவை உபயோகிப்பதினால், பித்தத்தினாலோ அல்லது வயதினாலோ மயிர் நரைத்து விடுகிறதைதத தடுத்து பழைய கருப்பு நிறத்துக்கே திருப்பி விடுகிறது. மற்ற தைலங்களை வெகு நாள் விடாது தடவி வந்தால்தான் குணம் தோன்றும். இத்தைலத்தையோ 5 நிமிஷம் உபயோகித்தால் முழுக்கருப்பாகி விடும். நல்ல வாசனையும் வீசும். கிழத்தனத்தைப் போக்கடித்து யௌவனத்தையும் கொடுக்கும். ஒரு தடவை வாங்கினால் உண்மை தெரியவரும்.

புட்டி, புருஷ் உடன் ரூபாய் 1—0—0
போஸ்டேஜ் 0—4—0

விலாசம்

வைரம் அண்டு கம்பெனி
3. இருளப்பன் தெரு மதறாஸ்.

எங்களைப்பற்றி

என்ன சொல்லுகிறார்கள்?

ஆந்திரா: இந்த ஔஷதாலயம் இந்தியாவில் மிகப்பெரிதென்றே சொல்லவேண்டும்.

திராவிடாபிமானி: இவர்களின் அபிவிர்த்திக்கு மருந்துகளின் நற்குணமே காரணம்.

பெண்கல்வி: அவர்களுடைய பொதுமையேதான் வியாபாரத்தை அதிகப்படுத்துகிறது. இப்பொழுது உலகெலாம் பரவுகிறது.

ஞானபானு: இந்த ஔஷதாலயம், "பொறுமையுடையார் பூமியாள்வார்" என்பதற்குப் போதுமான அத்தாட்சியாயிருக்கிறது.

கலைமகள்: இவர்கள் வியாபாரத்தைக் கவனிக்கும்போது அளவற்ற அற்புதமான மருந்துகள் வைத்திருக்கிறதாய் விளங்குகிறது அவர்களின் பிரசித்திக்கு மருந்தின் குணந்தான் காரணம் என்று திட்டமாய்ச் சொல்லுகிறோம்.

இவ்விதமாகவும் இன்னும் அதிகமாகவும் இந்தியாவிலுள்ள சுமார் 212 பத்திரிகைகள் புகழ்கின்றன. யாரைப்பற்றி யென்று நினைக்கிறீர்கள்?

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயத்தைப் பற்றியேதான்.

விபரமான ரிபோர்ட்டை விரும்புவோர் விலாசத்தைத் தெரிவித்தால் இனாமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

45, மேலக் கோபுரவீதி, மதுரை.